சத்தியத்தை நோக்கி நடைபோட...



முஸ்லிமின் அடிப்படைக்கடமை

சிந்தையைக் கிளறும் இந்நூலில் இஸ்லாமிய சமுதாயத்தின் பிரச்னைகள், பொறுப்புகள், கடமைகள் ஆகிய அனைத்தும் தெள்ளத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

சையித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்)

IRs 15.00 ISBN 81 232 0011 0



இஸ்லாமிய இயக்கம் ஏன்? எதற்கு?

இஸ்லாமிய இயக்கம் - அதன் நோக்கம், போக்கு, இலக்கு, பாதை ஆகியவற்றையும் இன்று அது ஏன் தேவைப்படுகிறது என்பதையும் விளக்கும் படைப்பு.

குர்ரம் முராத்

IRs 7.00 ISBN 81 232 0001 3



இயக்கம் வெற்றி பெற...

இயக்கப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொரு ஊழியரும் இயக்கத்தின் வெற்றிக்காக தம்மை தயார்படுத்துவது குறித்து விளக்கும் நூல்! இயக்க ஊழியர்கள் ஒவ்வொருவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல்!

சையித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்)

IRs 28.00 ISBN 81 232 0098 6



குற்றவாளிக் கூண்டில் முஸ்லிம்

சத்தியத்திற்கு சான்று பகர வேண்டிய முஸ்லிம் தனது கடமைகளை நிறைவேற்றும்போது ஏற்படுகிற நன்மைகள் - அதிலிருந்து நழுவும் போது ஏற்படுகின்ற கோரமான விளைவுகள் ஆகியவற்றை மனதில் பதியும் வண்ணம் நாவல் வடிவில் நவில்கிறது இந்நூல்!

அபுன் நஸ்ர் ஆபிர்

IRs 12.00 ISBN 81 232 0076 5

இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட் (IFT)
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 12. போன் : 2662 4401

IRs. 20.00 ISBN 81 232 0075 7



AHAM HIDAYATEN (Tamil)

தொண்டு சிறக்க...

மௌலானா சையித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்)

வெளியீட்டெண் : 106

தொண்டு சிறக்க...

மௌலானா ஸையித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்)

தமிழில்:
'ஷிஹாப்'

வெளியீடு :

இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை,சென்னை - 600 012,
போன் : 2662 4401. Fax : 91-44-2662 0682.
E-mail: iftchennai12@gmail.com www.iftchennai.org

© ISLAMIC FOUNDATION TRUST, CHENNAI.

All rights reserved. No part of this publication may be reproduced or translated or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopy, recording or any information storage or retrieval system, without permission in writing from the publisher.

Aham Hidayaten (Tamil)
Thondu Sirakka...

First Edition	:	Sep. 1994
Reprints	:	Dec 1996 July 2002
	:	Mar 2006
Fourth Reprint	:	Nov 2009
ISBN	:	978 81 232 0075 0
Price	:	**Rs. 20.00**
Authors	:	**Moulana Syed Abul A'la Moududi (Rah)**
Translator	:	**'Shihaab'**
Publisher	:	ISLAMIC FOUNDATION TRUST 138, Perambur High Road Chennai - 600 012, India Ph : +91 44 2662 44 01, 4332 6446 Fax : +91 44 2662 0682 E-mail: iftchennai12@gmail.com Website: www.ift-chennai.org

Printed at Patel Graphics, Chennai

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

பதிப்புரை

பொதுவாழ்வில் ஈடுபடும்போது அறிந்தும் அறியாமலும் பல தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. ஒருவருக்கொருவர் புரிந்து கொள்வதில் - பரஸ்பர அணுகுமுறையில் - பிறரை மதிப்பிடுவதில் எத்தனையோ பிறழ்வுகள் ஏற்பட்டு விடுகின்றன. இதனால் பல சிக்கல்கள்... சிரமங்கள்..!

குறிப்பாக ஓர் இயக்கத்துடன் இணைந்து இறை நெறிக்கும் சமுதாயத்திற்கும் தொண்டாற்ற முன்வரும் போது பலருடனும் சேர்ந்து செயல்பட வேண்டியிருக்கிறது. அவ்வகையில் இயக்க ஊழியர்களுக்கு மனமுதிர்ச்சியும் பக்குவமும் தேவைப்படுகின்றன. மேலும் இறைவழியில் பாடுபடும்போது இன்னல்களும் இடையூறுகளும் ஏற்படவே செய்யும். இவற்றைக் களைய நாம் என்ன செய்ய வேண்டும்? தேவைப்படும் பக்குவத்தைப் பெறுவது எப்படி? எத்தகைய வழிகாட்டுதலைப் பின்பற்றினால் நம் தொண்டு சிறக்கும்? நேரிய வழியில் நம் ஆளுமைகளை வளர்த்துக் கொள்வது எப்படி?

இந்த வினாக்களுக்குரிய விடைகளை பேரறிஞர் ஸையித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்) அவர்கள் தமக்கே உரிய பாணியில் வழங்கியுள்ளார்கள். இயக்கத் தொண்டர்களிடையே ஆற்றப்பட்ட உரைதான் என்றாலும் பொதுமக்களும் பயன்பெறும் வகையிலேயே இந்

தப் பேருரை அமைந்துள்ளது. சமூக வாழ்வில் பின்பற்ற வேண்டிய மரபுகள் குறித்து மௌலானா அவர்கள் தெளிவாக விளக்கியுள்ளார்கள். நடைமுறை வாழ்வில் இதை ஒவ்வொருவரும் பின்பற்றி வெற்றிபெற முயல வேண்டும்.

இம்முயற்சிக்கு இறையருள் துணை நிற்கட்டும் என்று இறைஞ்சிய வண்ணம் தமிழ்கூறு நல்லுலகிற்கு இந்நூலைச் சமர்ப்பிக்கின்றோம்.

2.9.94
சென்னை-12.

M.A.ஜமீல் அஹ்மத்
பொதுச் செயலர்
இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்

அத்தியாயம் - 1

இறைவனுடன் தொடர்பு — அதன் முக்கியத்துவம்

அல்லாஹ்வை அஞ்ச வேண்டும்; அவன் மீது கொண்டுள்ள அன்பை இதயத்தில் அதிகப்படுத்த வேண்டும். நபிமார்களும் சமுதாயச் சான்றோர்களும், உத்தமத் தலைவர்களும் தங்களைப் பின்பற்றுவோருக்கு முதன்மையாகவும் முக்கியமாகவும் இந்த அறிவுரையைத்தான் அளித்து வந்தனர். அந்த சான்றோர்களைப் பின்பற்றி நானும் நமது இயக்கத் தோழர்களுக்கு அதே முக்கிய விஷயங்கள், வழிகாட்டுதல்களைத்தான் அளிக்க வேண்டியுள்ளது. எதிர்காலத்தில் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் இதே அறிவுரையைத்தான் வழங்குவேன். ஏனெனில், ஏனைய எல்லா விஷயங்களையும் விட முன்னுரிமை தரவேண்டிய முக்கிய விஷயம் இதுவே!

கொள்கையில், அல்லாஹ்வின் மீது நம்பிக்கைக்கே முதலிடம்; வழிபாடுகளில் அல்லாஹ்வின் மீதான இதயப்பூர்வ ஈடுபாட்டிற்கே முதலிடம்; ஒழுக்கப் பண்பாடுகளில் இறையச்சத்துக்கே முதலிடம். வாழ்வின் நடைமுறை விவகாரங்களில் இறைஉவப்பைப் பெறுவதற்கே முதலிடம்.

அனைத்துத் துறைகளிலும் நமது வாழ்க்கை சீரடைந்து, தூய்மை பெற வேண்டுமானால், அனைத்துத் தியாகங்களிலும் முயற்சிகளிலும் அல்லாஹ்வின் திருப்தியை - நெருக்கத்தைப் பெற வேண்டும் எனும் குறிக்கோள்தான் ஏனைய எல்லா எண்ணங்களையும் விட மேலோங்கி நிற்க வேண்டும். குறிப்பாக எந்தப் பணிக்காக நாம் ஒரு ஜமாஅத் - கூட்டமைப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறோமோ அந்தப் பணி இறைத் தொடர்பு எனும் அடிப்படையில்தான் தொடர்ந்து நடைபோட முடியும். இறைத் தொடர்பு எவ்வளவுக் கெவ்வளவு உறுதியாக இருக்குமோ அவ்வளவுக்கவ்வளவு நாம் மேற்கொண்டு இருக்கும் இப்பணியும் உறுதி

யாக அமையும். இறைத் தொடர்பு எப்போது பலவீனமடைகிறதோ, அக்கணமே நமது பணியும் பலவீனமடைந்தே தீரும்.

மனிதன் எந்தப் பணியைச் செய்ய முற்பட்டாலும், அது உலகியல் தொடர்பாக இருந்தாலும் சரி, இறைநெறி தொடர்பாக இருந்தாலும் சரி - அதன் உண்மையான உந்தும் சக்தி, அப்பணியின் மூலமாக அடையவிருக்கின்ற குறிக்கோள்தான் என்பது வெளிப்படை.

குறிக்கோளை அடைய வேண்டுமென்ற மனிதனின் எண்ணம், நிரந்தரமான உணர்வுகளால், நிலைகுலையாமல் இருந்தால் மட்டுமே, அவனது பணிகளிலே ஆர்வமும், உற்சாகமும் உண்டாக முடியும். தன்னுடைய மனோ இச்சைகளுக்காகவே பணியாற்றும் ஒருவன், கடைந்தெடுத்த சுயநலவாதியாக மாறாத வரை, தன் இச்சைகளை நிறைவேற்ற முடியாது. இச்சைகள் மீதான விருப்பம் எந்த அளவுக்கு கடினமாக இருக்குமோ, அந்த அளவுக்கு, அதைச் செயல்படுத்துவதிலும் தீவிரமாக இருப்பான்.

குழந்தைகளின் நன்மைக்காக பணியாற்றுகின்றவன், அக்குழந்தையின் அன்பில் பெரும் ஆர்வம் கொண்டிட வேண்டும். அப்பொழுதுதான், தன்னுடைய நலத்தையும், மகிழ்ச்சியையும், ஓய்வையும், குழந்தைகளின் நன்மைக்காக தியாகம் செய்ய முடியும். பிறகு, குழந்தைகளுக்கு மேலும், மேலும் நலன்களும் மகிழ்ச்சியும் கிடைக்கச் செய்வதற்காக, தனது இம்மையை மட்டுமல்ல, மறுஉலகைக்கூட இழந்து விடுகின்றான்.

தன்னுடைய சமுதாயத்திற்காகவும் நாட்டுக்காகவும் உழைப்பவன், நாட்டுப் பற்றிலும், சமுதாயப் பற்றிலும் கட்டுண்டு விடுகின்றான். அப்போதுதான் நாட்டு - சமுதாய சுதந்திரத்திற்காகவும், பாதுகாப்பிற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் பொருள் தியாகம், அடக்குமுறை, சிறைவாசம் போன்றவைகளை சகித்துக்கொள்ள அவனால் முடியும். இரவு பகல் பாராமல் தியாகங்கள் செய்து தன்னுயிரைக் கூட பலி கொடுப்பான்.

இப்போது சற்று சிந்திப்போம்! நாம் மேற்கொண்டுள்ள இந்த இயக்கப் பணியில் நமது சுயநல நோக்கம் எதுவுமில்லை; நம் குடும்ப நலனும் இதற்கு தூண்டுகோலாக இல்லை. ஏதேனும் தேச - சமூக நலன்களை முன் வைத்தும் நாம் செயல்படவில்லை. மாறாக, படைத்த ஏக இறைவனின் உவப்பை அடையவே நாம் நாடுகிறோம்; இந்தப் பணி, அவனுடைய பணி என்று கருதியே நாம் மேற்கொண்டுள்ளோம். நிலைமை இவ்வாறிருக்க, நீங்கள் ஒரு விஷயத்தை மிகவும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

அதாவது, இறைவனுடன் நாம் கொண்டிருக்கின்ற தொடர்பு உறுதியானதாகவும், வலிமையுள்ளதாகவும் இருக்காதவரை இச் சீரிய பணியை வேகத்துடனும் உற்சாகத்துடனும் உரிய முறையில் நாம் செய்திட இயலாது.

நமது அனைத்து விருப்பங்களும் அல்லாஹ்வின் வாக்கை (கலிமாவை) மேலோங்கச் செய்வதற்கான முயற்சியில் ஒருங்கிணையும் போது மட்டுமே, இப்பணியில் பேரார்வமும், உணர்வுப் பூர்வமான வேகமும் ஏற்பட முடியும். இப்பணியில் ஈடுபடுவோரின் தொடர்பு அல்லாஹ்வுடனும் இருக்கிறது என்பது போதுமானதல்ல. மாறாக, அவர்களின் எல்லாத் தொடர்புகளும் அல்லாஹ்வுடன் மட்டுமே இருக்க வேண்டும். 'பல தொடர்புகளிலே ஒரு தொடர்பு அல்லாஹ்வுடனும் வைத்துக் கொள்வோம்' என்று இருந்தால் போதாது. மாறாக, அல்லாஹ்வுடனான ஒரே தொடர்பு மட்டும்தான் அசல் தொடர்பு எனும் நிலை இருக்க வேண்டும். அல்லாஹ்வுடன் இருக்கின்ற தங்களுடைய தொடர்பு, எந்த விதத்திலும் சிதைந்துவிடக் கூடாது. ஒவ்வொரு வினாடியும், அத்தொடர்பு வளர்ந்து கொண்டே இருக்க வேண்டுமென்ற கவலையே அவர்களை எப்போதும் வாட்டிக் கொண்டிருக்க வேண்டும்.

இறைத் தொடர்புதான், நமது இச்சீரிய பணியின் உயிர்நாடி என்பதிலே நமக்கிடையே இரு கருத்துக்கள் இருக்க முடியாது. இறையருளால் இயக்க உறுப்பினர்களில் ஒருவர்கூட இதன் முக்கியத்துவத்தை உணராதவர்களாய் இல்லை.

ஆனால், அல்லாஹ்வுடனான தொடர்பின் உண்மைப் பொருள் என்ன? அதனை உருவாக்கவும் வளர்ப்பதற்கும் உள்ள வழிமுறைகள் யாது? நமது தொடர்பு உண்மையாகவே அல்லாஹ்வுடன் நிலைநாட்டப்பட்டுள்ளதா, இல்லையா? இருக்கிறது என்றால் எந்த அளவு இருக்கிறது என்பதை எப்படி புரிந்துகொள்வது? இதுபோன்ற கேள்விகளுக்குத் தெளிவான பதில் கிடைக்காததால் பலர் குழப்பத்தில் ஆழ்த்தப்பட்டிருக்கிறார்கள்.

மேலே கண்ட கேள்விகளுக்கு விடை கிடைக்காததால் அவர்களுக்குள் ஒருவித சஞ்சலமும் திகைப்பும் காணப்படுகின்றன. எத்திசையைக் குறிக்கோளாகக் கொண்டு பயணம் செய்கின்றனர்? எவ்வளவு தூரம் வந்துள்ளனர்? இப்போது எங்கே நிற்கின்றனர்? முன்னோக்கிச் செல்ல எந்தெந்தக் கட்டங்களை கடந்து செல்ல வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு ஒரு பாலைவனத்தின் நடுவே அகப்பட்டுக் கொண்டிருப்பது போல் அவர்கள் கருதுகின்றனர். இதன் காரணமாக, நம்

தொண்டர்களில் சிலர், சில சமயம் தெளிவற்ற ஏதோ சில கற்பனையில் மூழ்கிவிடுகின்றனர். இதனால் உண்மையான இலக்கை எட்ட முடியாத தவறான பாதைக்கு திரும்பி விடுகின்றனர். குறிக்கோளுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட அல்லது தூர தொடர்பு கொண்ட விஷயங்களை அவர்களால் பிரித்தறிய முடியாமல் போகிறது. சிலரோ திசையறியாமல் திகைத்துக் கொண்டிருக்கின்றனர்.

எனவே, இன்றைய அமர்வில் ஏக இறைவனான அல்லாஹ்விடம் மட்டுமே நம் தொடர்பை வைத்துக்கொள்ள வேண்டும் என்று அழுத்தமாக அறிவூட்டுவதுடன் நிற்காமல் மேற்சொன்ன கேள்விகளுக்கு என் அறிவுக்கு எட்டிய அளவு தெளிவான விடைகளை உங்கள் முன் எடுத்துரைக்க முயல்கிறேன், இன்ஷா அல்லாஹ். *(இறைவன் நாடினால்.)*

இறைத் தொடர்பின் பொருள்

இறைவனுடன் தொடர்பு என்பது என்ன? திருக்குர்ஆன் அதனை எவ்வாறு விளக்குகிறது? மனிதனின் வாழ்வும் மரணமும், வழிபாடுகளும், தியாகங்களும் ஆகிய அனைத்துமே அல்லாஹ் ஒருவனுக்காக மட்டுமே இருக்க வேண்டும்.

قُلْ اِنَّ صَلَاتِيْ وَنُسُكِيْ وَمَحْيَايَ وَمَمَاتِيْ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ

கூறுவீராக:- ''நிச்சயமாக எனது தொழுகையும், என்னுடைய வழிபாடுகளும், என்னுடைய வாழ்வும், என்னுடைய மரணமும் அகிலங்களின் அதிபதியான அல்லாஹ்வுக்கே உரியதாகும்.'' *(6:162)*

மேலும், மனிதன் முற்றிலும் ஒருமனப்பட்டு தன்னுடைய நெறியை அல்லாஹ்வுக்காகவே உரித்தாக்கிக் கொள்ள வேண்டும். அவனுக்கே அடிபணிய வேண்டும்.

وَمَآ اُمِرُوْٓا اِلَّا لِيَعْبُدُوا اللّٰهَ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ

மேலும், தங்கள் நெறியை (தீனை) அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தாக்கியவர்களாய், முற்றிலும் ஒருமனப்பட்டவர்களாய் அல்லாஹ்வுக்கு அடிபணிய வேண்டும். *(98:4)*

அண்ணல் நபி *(ஸல்)* அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் இப்பிரச்னை குறித்து நவின்றுள்ளார்கள். இவ்விஷயத்தில் யாருக்கும் எந்த ஐயப்பாடும், மனக்குழப்பமும், தெளிவின்மையும் எஞ்சி நிற்காத அளவுக்கு இதனைத் தெளிவாக விளக்கியுள்ளார்கள்.

خَشْيَةَ اللّٰهِ فِي السِّرِّ وَالْعَلَانِيَةِ

அண்ணலாரின் அறிவுரைகளை ஆழ்ந்து கவனித்தால் இறைவனுடனான தொடர்பில் முதன்மையானது வெளிப்படையாகவும், மறைவாகவும் எந்நிலையிலும் எப்பணி செய்யும் போதும் அல்லாஹ்வின் அச்சத்தை மனிதன் உணர வேண்டும்.

اَنْ تَكُوْنَ بِمَا فِيْ يَدَيِ اللّٰهِ اَوْثَقَ بِمَا فِيْ يَدَيْكَ

இரண்டாவதாக, தம்முடைய வசதி வாய்ப்புக்களை சார்ந்து இருப்பதை விட அதிகமாக அல்லாஹ்வின் வலிமையையே சார்ந்திருக்க வேண்டும். மேலும் மக்களின் விருப்பத்தைப் பெறுவதற்காக அல்லாஹ்வின் வெறுப்புக்கும், சினத்துக்கும் ஒருபோதும் ஆளாகிவிடக் கூடாது. அதற்கு நேர்மாறாக அல்லாஹ்வின் உவப்பைப் பெறும் பாதையில் மக்களின் வெறுப்பை சம்பாதிக்க நேரிடுகிறதென்றால், அதனைப் பொருட்படுத்தக் கூடாது.

பிறகு, இறைவனுடனான இந்தத் தொடர்பு வளர்ந்த வண்ணமே இருக்க வேண்டும். இது வளர்ந்து வளர்ந்து எந்தக் கட்டத்தை எட்ட வேண்டும் எனில், மனிதனுடைய அன்பும் பகைமையும், அவன் ஒருவருக்கு வழங்குவதும், வழங்காமல் இருப்பதும் ஆகிய அனைத்துமே அல்லாஹ்வுக்காகவே அமைந்திட வேண்டும். இவற்றில் தன்னுடைய மன இச்சைக்கோ மன வெறுப்புக்கோ இம்மியளவும் இடம் இருக்கக்கூடாது. இந்நிலையை ஒரு மனிதன் அடைந்துவிட்டால், அல்லாஹ்வுடன் அவனுடைய தொடர்பு முழுமை பெற்று விட்டது என்று பொருள். இதனையே நபிமொழி இவ்வாறு விளக்குகிறது.

مَنْ اَحَبَّ لِلّٰهِ وَاَبْغَضَ لِلّٰهِ وَاَعْطٰى لِلّٰهِ وَمَنَعَ لِلّٰهِ فَقَدِ اسْتَكْمَلَ الْاِيْمَانَ

''எவனொருவன் அல்லாஹ்வுக்காகவே நேசிக்கின்றானோ, அல்லாஹ்வுக்காகவே பகைக்கின்றானோ, அல்லாஹ்வுக்காகவே கொடுக்கின்றானோ, அல்லாஹ்வுக்காகவே கொடுக்காமல் இருக்கின்றானோ அவன் தன்னுடைய நம்பிக்கையை (ஈமானை) முழுமையடையச் செய்து விட்டான்.''

பிறகு ஒவ்வொரு நாளும் இரவில் நீங்கள் இறைவனிடம் இவ்வாறு இறைஞ்சுகிறீர்கள். அதன் ஒவ்வொரு வார்த்தையும் இறைதொடர்பைக் கோடிட்டுக் காட்டுகிறது. இறைவனுடனான உங்களுடைய தொடர்பு எவ்வாறிருக்க வேண்டும் என்று அது விளக்குகிறது. அந்த வார்த்தைகளை ஆழ்ந்து கவனியுங்கள். ஒவ்வொரு இரவிலும் நம்மைப் படைத்த அல்லாஹ்வுடன் எத்தகைய தொடர்பை நாம் வைத்துள்ளோம் என்று நீங்கள் வாக்குறுதி அளித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை ஆராய்ந்த வண்ணம் இருங்கள்.

இதோ, அந்த வாக்குறுதி!

اَللّٰهُمَّ اِنَّا نَسْتَعِيْنُكَ وَنَسْتَهْدِيْكَ وَنَسْتَغْفِرُكَ وَنُؤْمِنُ بِكَ وَنَتَوَكَّلُ عَلَيْكَ وَنُثْنِى عَلَيْكَ الْخَيْرَ كُلَّهُ وَنَشْكُرُكَ وَلَانَكْفُرُكَ وَنَخْلَعُ وَنَتْرُكُ مَنْ يَّفْجُرُكَ. اَللّٰهُمَّ اِيَّاكَ نَعْبُدُ وَلَكَ نُصَلِّى وَنَسْجُدُ وَاِلَيْكَ نَسْعَى وَنَحْفِدُ وَنَرْجُوْ رَحْمَتَكَ وَنَخْشَى عَذَابَكَ اِنَّ عَذَابَكَ بِالْكُفَّارِ مُلْحِقٌ.

''இறைவா! உன்னிடமே உதவி தேடுகிறோம். உன்னிடமே வழிகாட்டுதலை நாடுகிறோம். உன்னிடமே மன்னிப்புக் கேட்கிறோம். உன் மீதே நம்பிக்கை கொள்கிறோம். உன்னைச் சார்ந்தே நிற்கிறோம். புகழனைத்தும் உனக்குரியதே! நாங்கள் உனக்கே நன்றி செலுத்துவோராக விளங்குவோம். நன்றி கொல்பவராக இருக்க மாட்டோம். நாங்கள் உனக்கு மாறு செய்கின்ற ஒவ்வொன்றையும் விட்டு விலகி நிற்போம். இறைவா! நாங்கள் உனக்கே அடிபணிகிறோம். உன்னையே வழிபடுகிறோம். உனக்காகவே ஸஜ்தா செய்கிறோம். எங்களுடைய உழைப்பு, ஈடுபாடுகள் அனைத்தும் உனக்காகவே இருக்கின்றன. நாங்கள் உன்னுடைய

கருணையை நம்பியே நிற்கிறோம். உன்னிடமிருந்து வரக்கூடிய வேதனைக்கு அஞ்சுகின்றோம். திண்ணமாக, இறைநிராகரிப்பாளர்கள் உன்னுடைய கடுமையான வேதனைகளை அடைய வேண்டியிருக்கிறது.''

அல்லாஹ்வுடனான இந்தத் தொடர்பை அண்ணலார் பின்னிரவுத் தொழுகையில் (தஹஜ்ஜுத்தில்) ஓதி வந்த - நமக்குக் கற்றுத் தந்திருக்கிற இறைஞ்சுதலின் இந்த வார்த்தைகளும் படம் பிடித்துக் காட்டுகின்றன. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருமுன் இவ்வாறு பணிந்து கூறுகிறார்.

اَللّٰهُمَّ لَكَ اَسْلَمْتُ وَبِكَ آمَنْتُ وَعَلَيْكَ تَوَكَّلْتُ وَاِلَيْكَ اَنَبْتُ وَبِكَ خَاصَمْتُ وَاِلَيْكَ حَاكَمْتُ.

''இறைவா! நான் உனக்கே முற்றிலும் அடிபணிந்தவனாக இருக்கின்றேன். உன் மீதே நம்பிக்கை கொண்டிருக்கின்றேன். முற்றிலும் உன்னைச் சார்ந்தே நிற்கின்றேன்! மேலும், உன் பக்கமே மீளுகின்றேன். உனக்காகவே போரிடுகின்றேன். உன்னிடமே என் வாழ்க்கையைச் சமர்ப்பிக்கின்றேன்.''

இறைத்தொடர்பு வளர்வதற்கான வழிமுறைகள்

ஒரு நம்பிக்கையாளனுக்கு அல்லாஹ்வுடன் இருக்க வேண்டிய தொடர்பின் துல்லியமான தன்மையை நாம் பார்த்தோம். இனி, அத்தொடர்பை உருவாக்கவும் வளரச் செய்யவும் தேவையான வழிமுறைகள் பற்றி கவனிப்போம்.

உண்மையிலேயே இதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அதாவது, இப்பேரண்டத்தைப் படைத்த அல்லாஹ்வை ஆட்சியாளனாக, வணக்கத்திற்குரியவனாக, தீர்ப்பு நாளின் அதிபதியாக ஏற்றுக்கொள்வதுதான் அது. இறைமையின் பண்புகள் அனைத்தும் அத்துடன் அதன் உரிமைகள், அதிகாரங்கள் யாவுமே அல்லாஹ்வுக்கு மட்டும்தான் இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இதன் மூலம் அனைத்துவிதமான (ஷிர்க்கில்) இணைவைப்பில் இருந்தும் இதயத்தைத் தூய்மையாக்கிட வேண்டும். இப்பணிகளை ஒரு மனிதன் சரிவர செய்து முடிக்கும்போது அல்லாஹ்வுடன் அவனுக்கு சீரான தொடர்பு ஏற்பட்டு விடுகிறது.

அந்தத் தொடர்பு மேலும் வலுப்பெற இரண்டு வழிமுறைகள் உள்ளன.

1. சிந்தனைத் தெளிவு. 2. செயல்முறை.

சிந்தனை ரீதியாகவும், புரிந்து கொள்ளுதல் மூலமாகவும் இறைத் தொடர்பை வளர்த்துக் கொள்வதற்கான வழி இதுவே: உங்களுக்கும் ஏக இறைவனுக்கும் இடையில் இயல்பாகவே உறவு முறைகள் இருக்கவே செய்கின்றன. நடைமுறையிலும் அவை துடிப்புடன் இருக்க வேண்டியது அவசியமாகும். திருக் குர்ஆனையும் ஆதாரப்பூர்வமான நபிமொழிகளையும் துணையாகக் கொண்டு அந்தத் தொடர்புகளை விரிவாகவும் அதிகமாகவும், தெளிவாகவும் புரிந்துகொள்ள வேண்டும். அதன் ஒளியில் அல்லாஹ்வுக்கும் உங்களுக்கும் இடையில் இருக்கும் உறவின் தன்மைகள் உயிர்த்தெழுவது தெரிய வரும். பிறகு, தம்முடைய நிலையைத் தொடர்ந்து ஆழ்ந்த அக்கறையுடனும், சிந்தனையுடனும் சீர்தூக்கிப் பார்த்து அந்த உறவின் தேட்டங்களை எந்த அளவு நீங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறீர்கள், எத்திசையிலிருந்து, எந்தக் கோணத்திலிருந்து என்ன குறைபாடுகளை நீங்கள் உணருகிறீர்கள் என்பதையெல்லாம் நீங்களே சுய மதிப்பீடு செய்த வண்ணம் இருக்க வேண்டும். இத்தகைய உணர்வும், சுய ஆய்வும் எவ்வளவுக்கெவ்வளவு வளர்ச்சியடையுமோ, அவ்வளவுக்கவ்வளவு அல்லாஹ்வுடன் இருக்க வேண்டிய உங்களுடைய தொடர்பும் வளர்ந்துகொண்டே போகும். - இறைவன் நாடினால்!

உதாரணமாக,

அல்லாஹ்வுக்கும் உங்களுக்கும் இடையில் இருக்கின்ற உறவுகளில் ஒன்று, நீங்கள் அடிமைகள்; அவன் உங்களின் எஜமானன் என்பது!

இரண்டாவது உறவு - நீங்கள் இப்பூவுலகில் அவனுடைய பிரதிநிதியாகவும் (கலீஃபா) இருக்கின்றீர்கள். ஏராளமான அமானிதங்களை, அடைக்கலப் பொருள்களை அவன் உங்களிடம் ஒப்படைத்துள்ளான்.

மூன்றாவது உறவு - அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டு அவனுடன் ஒரு வியாபார ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதே! அவ்வொப்பந்தப்படி உங்களுடைய உயிரையும், உடைமையையும் அல்லாஹ்விடம் நீங்கள் விற்றுவிட்டீர்கள். சொர்க்கம் தருவதாக வாக்குறுதியளித்து அவன் அவற்றை உங்களிடமிருந்து வாங்கியும் விட்டான்.

இறைவனுக்கும் உங்களுக்கும் இடையிலான நான்காவது உறவு: அவனிடம் பதிலளிக்கக் கடமைப்பட்டவர்கள் என்பது! அவன் உங்களுடைய புறத் தோற்றங்களைக் கண்டு அதனடிப்படையில் மட்டும் விசாரணை செய்பவனல்ல; மாறாக, நமது ஒவ்வொரு அசைவுகளை மட்டுமல்ல; இதயத்தினுள்ளே ஒளிந்திருக்கும் எண்ணங்கள்கூட பதிவு செய்யப்பட்டு அவனிடம் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

சுருங்கக் கூறின், இதுபோன்ற பல உறவுகள் உங்களுக்கும் இறைவனுக்கும் இடையே இருந்து கொண்டிருக்கின்றன. மேற் சொன்ன தொடர்புகளை சரிவரப் புரிந்துகொள்ள வேண்டும். அதைப் பற்றிய உணர்வும் நினைவும் எந்நேரமும் இருக்க வேண்டும்; மேலும், அதன் தேட்டங்களை சரிவர நிறைவேற்ற வேண்டும். அதைப் பொறுத்துதான் அல்லாஹ்வுடனான உங்களுடைய தொடர்பின் வளர்ச்சியும் நெருக்கமும் அமையும். மேற்கண்ட தேட்டங்களை நிறைவேற்றுவதில் நீங்கள் எந்த அளவு அலட்சியமாகவும் கவனக்குறைவாகவும் இருக்கின்றீர்களோ அந்த அளவு இறைவனுடனான உங்கள் தொடர்பும் பலவீனமடைந்ததாக இருக்கும். அதைப் பற்றி எவ்வளவுக்கெவ்வளவு உணர்ந்து கவனம் செலுத்துகிறீர்களோ, அதனடிப்படையில்தான் மேற்படி தொடர்பு உறுதியுள்ளதாகவும் அழுத்தமானதாகவும் இருக்கும்.

ஆனால், இதுவரை நாம் பேசியது சிந்தனை ரீதியான வழிமுறை. அது பலனளிக்கக் கூடியதாக விளங்க வேண்டுமெனில், செயல்ரீதியாக அதற்கு உரமூட்ட வேண்டும்; வலுவடையச் செய்ய வேண்டும்.

செயல்ரீதியான வழிமுறை என்ன? அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு வாய்மையாக கீழ்ப்படிவது. அல்லாஹ்வின் உவப்பை இப்பணியின் வாயிலாக அடைய முடியும் என்று ஒருவருக்குத் தெரிய வந்தால், அப்பணியில் உயிரைக் கூட தியாகம் செய்து உழைக்க ஆயத்தமாக அவர் இருக்க வேண்டும்.

அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதில் அரைகுறை மனதுடன் செயல்படக்கூடாது. மாறாக, முழு உள்ளார்வத்துடனும், முழு உத்வேகத்துடனும் செயல்பட வேண்டும். தனிமையிலும் சரி, வெளிப்படையாகவும் சரி, அந்தத் துடிப்புடன்தான் செயல்பட வேண்டும். உலக இலாபங்களுக்காகவோ, உலகியல் நோக்கங்களுக்காகவோ அப்பணிகளைச் செய்யக் கூடாது; மாறாக, அல்லாஹ்வின் உவப்பை மட்டுமே நாடி அவற்றை நிறைவேற்ற வேண்டும்.

அதேபோல், அல்லாஹ் தடுத்துள்ள செயல்களை வெறுக்க வேண்டும். தனிமையிலும் சரி; வெளிப்படையாகவும் சரி. அவற்றை விட்டு விலகியே இருக்க வேண்டும். எந்த உலகியல் ரீதியான இழப்பு மற்றும் அச்சங்களின் அடிப்படையில் அல்லாமல், இந்தச் செயல்களில் ஈடுபட்டால் அல்லாஹ்வின் சினத்துக்கு பலியாவோம் எனும் அச்சம் மட்டுமே உங்களை அவற்றிலிருந்து தடுத்திருக்க வேண்டும்.

இத்தகைய செயல்முறை மனிதனை இறையச்சமுடையவன் (தக்வா) எனும் நிலைக்கு உயர்த்துகிறது.

அதற்கு அடுத்தபடியாக, மற்றுமொரு உன்னதநிலை இருக்கிறது. அதற்கு குர்ஆன், ஹதீஸ் மரபில் 'இஹ்ஸான்' - மிகவும் அழகிய நன்னடத்தையுடைய நிலை - என்று பெயர்.

இந்நிலையை அடைய ஒரு படி மேலே சென்று செயலாற்ற வேண்டியதாக இருக்கிறது. அதாவது அல்லாஹ் விரும்புகின்ற ஒவ்வொரு நன்மையையும் உலகில் மேலோங்கச் செய்யக் கடுமையாக உழைக்க வேண்டும். அல்லாஹ் அழிக்க விரும்புகின்ற தீமைகள் ஒவ்வொன்றையும் உலகில் எங்கும் இல்லாதபடி பூண்டோடு அழிக்கும் முழு முயற்சியில் ஈடுபட வேண்டும். இதற்காகத் தன் உயிர், உடைமை, காலம், உழைப்பு, உடலாற்றல், சிந்தனையாற்றல் ஆகிய அனைத்தையும் பயன்படுத்த வேண்டும். ஆக, எதுவொன்றையும் இந்தப் பாதையில் தியாகம் புரிவதில் கஞ்சத்தனம் செய்யக்கூடாது.

பிறகு, இப்பாதையில் நீங்கள் செய்த தியாகங்கள் குறித்து உங்கள் மனத்தில் இம்மியளவும் மமதை கொள்ளக் கூடாது. நீங்கள் இந்தப் பணிகளைப் புரிந்து 'இன்னாருக்கு உதவியிருக்கிறோம்; இன்னார் எனக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறார்' என்றெல்லாம் நீங்கள் சிந்திக்கக் கூடாது. மாறாக, மாபெரும் தியாகங்கள் புரிந்த பிறகும் படைத்தவனுக்கு ஆற்ற வேண்டிய கடமையை முழுமையாக நம்மால் ஆற்ற முடியவில்லையே எனும் ஏக்கம்தான் உங்கள் உள்ளத்தில் இருக்க வேண்டும்.

இந்த வழிமுறையை மேற்கொள்வது அவ்வளவு எளிதான காரியமல்ல; மிகப்பெரிய இன்னல்கள் நிறைந்த பாதைதான் இது. அப்பாதையினூடே செல்ல மிகப் பெரிய வலிமைகள் தேவைப்படுகின்றன. அந்த வலிமைகள் மனிதனிடத்தில் ஒருங்கிணைய வேண்டுமானால் பின்வரும் வழிமுறைகளைக் கடைப்பிடித்தே ஆக வேண்டும்.

1. தொழுகை, 2. இறைதியானம், 3. நோன்பு, 4. இறைவழியில் செலவு செய்தல்.

1. தொழுகை

ஃபர்ள், சுன்னத் தொழுகைகள் மட்டுமல்ல, நஃபில் தொழுகைகளையும் அதிகமதிகம் நிறைவேற்ற வேண்டும். ஆனால், இந்த நஃபில் தொழுகைகளைப் பிறர் அறியாத வண்ணம் நிறைவேற்ற வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அப்போதுதான் அல்லாஹ்வுடனான உங்களின் தனிப்பட்ட தொடர்பு வளர்ச்சி அடையும். அத்தோடு களங்கமற்ற உளத்தூய்மை உங்களிடம் தோன்றும். பின்னிரவு தொழுகைகள் குறிப்பாக 'தஹஜ்ஜுத்' தொழுகை பலர் அறிய வெளிப்படையாக நிறைவேற்றப்படும்போது சில சமயம் மனிதனுள்ளே பெருமையையும், கர்வத்தையும் ஏற்படுத்துகிறது. ஒரு நம்பிக்கையாளனைப் பொருத்தவரை தற்பெருமை எனும் இந்தக் கொடிய நோயைவிட பெரும் நாசத்தை விளைவிக்கக் கூடியது வேறெதுவுமில்லை. ஏனைய அதிகப்படியான வழிபாடுகள், தானதர்மங்கள், இறைதியானங்கள் முதலானவை வெளிப்படையாக நிறைவேற்றப்படும்போதும் இத்தகைய அபாயம் ஏற்பட வாய்ப்புகள் மிகுதியாக இருக்கின்றன. இதைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

2. இறைதியானம்

வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் இது நிலைநாட்டப்பட வேண்டும். பிற்காலங்களில் சூஃபிகளில் பல்வேறு பிரிவினர்களால் சுயமாக உண்டாக்கப் பட்டதாகவோ, பிறரைப் பின்பற்றி ஏற்றுக் கொண்டதாகவோ உள்ள திக்ருகளின் வழிமுறைகள் சரியானதல்ல. நபி (ஸல்) அவர்கள் ஒதிய, தம் தோழர்களுக்கு கற்றுக் கொடுத்த வழிமுறைதான் சரியானதும், மிகச் சிறந்ததும் ஆகும். அண்ணல் நபி (ஸல்) கற்றுத் தந்த இறைதியானங்களையும், இறைஞ்சுதல்களையும் முடிந்த அளவு நாம் மனப்பாடம் செய்து கொள்ள வேண்டும்.

நபிமொழிகளில் வந்துள்ள இறைதியானங்களின் பொருளையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். பொருளை நினைவிலிருத்திய வண்ணம் அடிக்கடி அந்த திக்ருகளையும், துஆக்களையும் ஓதிய வண்ணம் இருக்க வேண்டும். அல்லாஹ்வைப் பற்றிய நினைவை பசுமையாக வைத்துக் கொள்ளவும் நமது உள்ளத்தை அல்லாஹ்வின் நினைவில் இலயிக்கச் செய்யவும் மிகச் சிறந்த பயனுள்ள வழிமுறை இதுவேயாகும்.

3. நோன்பு

கட்டாயமாக்கப்பட்ட நோன்புகள் மட்டுமல்லாமல் நஃபில் நோன்புகளையும் கடைப்பிடிக்க வேண்டும். நஃபில் நோன்பைப் பொறுத்தவரை அதன் சரியான முறை என்னவென்றால், ஒவ் வொரு மாதமும் மூன்று நாட்கள் முறையாக நோன்பு வைப்பதா கும். நோன்பின் உண்மையான குறிக்கோளாகிய இறையச்சத்தை (தக்வாவை) ஏற்படுத்திக் கொள்ள இந்நாட்களில் முயல வேண் டும்.

4. இறைவழியில் செலவு செய்தல்

கட்டாயக் கடமையான ஜகாத் மட்டுமல்ல, அத்துடன் நஃபி லான தான தர்மங்களையும் தன் வசதிக்கும் சக்திக்கும் ஏற்ப ஒருவன் அவசியம் நிறைவேற்றியாக வேண்டும். இவ்விஷயத்தில் ஒன்றை மட்டும் நல்ல முறையில் புரிந்துகொள்ள வேண்டும். அல்லாஹ்வின் வழியில் உங்களால் செலவிடப்படும் பணம் எவ்வளவு என்பது முக்கியமல்ல; மாறாக, அல்லாஹ்வின் உவப் பைப் பெறுவதற்காக நீங்கள் புரியும் தியாகத்தின் தூய தன்மைதான் இங்கே மதிப்புக்குரியதாகிறது; முதலிடம் பெறுகிறது.

ஏழை மனிதன் ஒருவன் தனது வயிற்றைக் கட்டி இறைவழி யில் செலவழிக்கின்ற ஒரு காசு, பணக்காரன் தனது சொகுசு வாழ்க்கையின் பத்தில் ஒரு பங்கோ, இருபதில் ஒரு பங்கோ தியாகம் செய்து கொடுக்கின்ற ஆயிரம் ரூபாயை விட இறைவனி டம் விலை மதிப்புள்ளதாகும். அத்துடன் இன்னொரு உண்மை யையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆன்ம சுத்திக்காக அல்லாஹ்வும் அவனது திருத்தூதரும் பல வழிமுறைகளைக் கற்றுத் தந்துள்ளனர். அவற்றில் தானதர்மங்கள் மிக முக்கியமான ஒன்றாகும்.

அதனுடைய தாக்கங்களை நீங்கள் அனுபவரீதியாகக் காண முடியும்.

நம்மிடமிருந்து எப்போதாவது தவறு ஏற்பட்டு அதற்காக நாம் மனம் வருந்தி மன்னிப்புக் கேட்பதோடு மட்டும் முடித்துக் கொள்கிறோம். மறுமுறை ஏதாவதொரு தவறு ஏற்படும்போது மன்னிப்புக் கேட்பதுடன், இறைவழியில் செலவிடவும் செய்கி றோமெனில் மேற்கண்ட இரண்டு நிலைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால், நாமே ஒரு முடிவுக்கு வர முடியும். மன்னிப்புடன்

தர்மமும் சேரும்போது அது மனிதனை அதிகமதிகம் தூய்மைப்ப டுத்துகிறது. மேலும், தவறான வேட்கைகளை எதிர்த்து நிற்கும் ஆற்றலை அதிகம் பெற்றுத் தருகிறது.

இது அல்லாஹ்வுடனான தொடர்பை வளர்த்துக்கொள்ள குர்ஆனும், நபிமொழியும் கற்றுத் தருகின்ற மிக எளிமையான நேரான வழிமுறையாகும். இதன் அடிப்படையில் நீங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தால் தன்னைத் தானே வதைத்துக் கொள்ளும் கடுந்தவம், பெரும் போராட்டங்கள் மற்றும் ஆழ்நிலை தியானங்கள் போன்றன தேவையில்லை. நீங்கள் உங்கள் இல்லத்தில், மனைவி மக்களுடன் வாழ்ந்துகொண்டே, அனைத்து உலகியல் பணிகளிலும் ஈடுபட்டுக் கொண்டே இறைவனுடனான தொடர்பை வளர்த்துக் கொள்ள முடியும்.

இறைத் தொடர்பை அளப்பதற்கான அளவுகோல்

அல்லாஹ்வுடனான நம்முடைய தொடர்பை எப்படி அளவி டுவது? அந்த தொடர்பு வளர்ந்து கொண்டிருக்கிறதா அல்லது தேய்ந்து கொண்டிருக்கிறதா என்பதை நாம் எப்படி அறிந்து கொள்வது எனும் வினா இப்பொழுது எழுகிறது.

அதை அறிந்துகொள்ள கனவில் ஏதாவது நற்செய்தி சொல்லப் பட வேண்டும்; அல்லது தியானங்களில் மூழ்கி இருக்கும்போது திடீர் உதிப்பின் மூலம் (கஷ்ஃப்) இறைவன் அதனை நமக்குத் தெரிவிக்க வேண்டும்; அல்லது ஏதாவது அற்புதங்கள் நம்மிடம் ஏற்பட வேண்டும்; அல்லது இருட்டறை தியானத்தின்போது பேரொளி வெளிப்பட வேண்டும் என்றெல்லாம் மக்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இறைவனுக்கும் நமக்கும் இருக் கின்ற தொடர்பை அளவிட இதுபோன்ற எதுவும் தேவையில்லை; அவற்றுக்காக காத்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை.

இறைத் தொடர்பை அளப்பதற்கான கருவியை அல்லாஹ் ஒவ்வொரு மனிதனுடைய இதயத்தினுள்ளேயும் வைத்திருக்கின் றான். நீங்கள் விழித்துக் கொண்டிருக்கும் போதே, பட்டப் பகலில் வெட்ட வெளிச்சத்தில் அதனை அளந்து பார்க்க முடியும்.

உங்கள் வாழ்க்கையை, நேரத்தை, உழைப்பை, முயற்சிகளை, ஆசைகளை, உணர்ச்சிகளை - அனைத்தையும் சுய ஆய்வு செய்து பாருங்கள்!

இறைநம்பிக்கையை மேற்கொண்டவுடன் அல்லாஹ்வுடன் செய்துகொண்ட வியாபார ஒப்பந்தத்தை எந்த அளவுக்கு நீங்கள் நிறைவேற்றுகிறீர்கள் என்பதை கவனித்துப் பாருங்கள்!

இறைவன் உங்களிடம் எண்ணற்ற வளங்களை அமானிதமாக ஒப்படைத்திருக்கின்றான். அந்த அமானிதங்களைக் கையாளுவ தில் நீங்கள் ஓர் உண்மையாளர், நேர்மையாளர் என நிரூபித்துக் கொண்டிருக்கிறீர்களா அல்லது நயவஞ்சகம் - மோசடி செய்து கொண்டிருக்கிறீர்களா?

உங்கள் நேரம், உழைப்பு, முயற்சி, ஆற்றல்கள், தகுதிகள், செல்வம் ஆகியவற்றில் எத்தனை பங்கை இறைவனுடைய பணிக் காக செலவிடுகிறீர்கள்? இதர பணிகளுக்காக எத்தனை பங்கு ஒதுக்கியுள்ளீர்கள்?

உங்களுடைய தன்மானமோ, உணர்ச்சிகளோ புண்பட்டால் எந்த அளவு கிளர்ந்தெழுகின்றீர்கள்? எந்த அளவு அமைதி இழக்கி றீர்கள்? அதே சமயம், அல்லாஹ்வுக்கு எதிரான இராஜத் துரோகம் மற்றும் ஆணவப் போக்குகளைக் கண்டு உங்கள் நிலை என்ன? உங்களுக்கு ஏதாவது வேதனையோ, துக்கமோ, அமைதியின் மையோ ஏற்படுகிறதா? இவற்றால் உந்தப்பட்டு நீங்கள் கிளர்ந்தெ முகிறீர்களா? இதுபோன்ற எண்ணற்ற கேள்விகளை உங்களுக்கு நீங்களே கேட்டுக் கொள்ள முடியும். ஒவ்வொரு நாளும் அல்லாஹ் வுடன் நம்முடைய தொடர்பு எப்படி இருக்கிறது? அது வளர்ந்து கொண்டு இருக்கிறதா, குறைந்து கொண்டே போகிறதா? வலுவ டைந்து வருகிறதா, வலுவிழந்து தேய்கிறதா என்பதையெல்லாம் அந்தக் கேள்விகளின் விடைகளிலிருந்து எளிதில் நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

இறைத்தொடர்பை அளவிட, இவ்வளவு எளிய வழி இருக் கும்போது, கனவில் நற்செய்தி, திடீர் உதிப்பு, அற்புதங்கள் மற்றும் இறையொளியின் வருகை பற்றியெல்லாம் நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

உண்மை இவையே:

★ இந்த லௌகீக உலகின் ஏமாற்றுக் காட்சிகளுக்கிடையே ஏகத்துவத்தின் உண்மையைக் காண்பதைவிட சிறந்த உதிப்பு (கஷ்ஃபு) வேறொன்றும் இல்லை.

★ ஷைத்தானும் அவனுடைய படையும் உங்கள் முன் ஒருபுறம் அச்சுறுத்தல்களையும், அபாயங்களையும் காட்டுகின்றன; மறுபுறம் அவை விரிக்கும் ஆசை வலைகள், பசப்பு வார்த்

தைகள். இவற்றுக்கு வசப்படாமல் சத்தியப் பாதையில் உறுதியுடன் நடைபோடுவதை விட பெரிய அற்புதம் (கரா மத்) வேறெதுவும் இல்லை.

★ இறைநிராகரிப்பு, இறைவனுக்கு மாறு செய்தல், இறை நெறியிலிருந்து பிறழ்ந்து செல்லுதல் ஆகியவற்றுக்கு இடை யில் சத்தியத்தை அறிந்து அதனைப் பின்பற்றுவதைவிட சிறந்த இறையொளிக் காட்சி எதுவும் இல்லை.

ஓர் இறைநம்பிக்கையாளனுக்குக் கிடைக்கக்கூடிய மாபெரும் நற்செய்தி ஏதேனும் இருக்கிறது எனில் அது இதுவே: அல்லாஹ் வைத் தன் அதிபதியாக ஏற்றுக்கொண்டு, அதில் நிலைகுலையா மல் நிற்க வேண்டும். அந்தப் பாதையில் உறுதியாக நடைபோட்ட வண்ணம் இருக்க வேண்டும். அந்த மாபெரும் நற்செய்தி இந்த வழியில்தான் ஒருவருக்குக் கிடைக்கும்.

திருக்குர்ஆன் கூறுகிறது:

إِنَّ الَّذِيْنَ قَالُوْا رَبُّنَا اللهُ ثُمَّ اسْتَقَامُوْا تَتَنَزَّلُ عَلَيْهِمُ الْمَلٰئِكَةُ اَلاَّ تَخَافُوْا وَلاَ تَحْزَنُوْا وَاَبْشِرُوْا بِالْجَنَّةِ الَّتِى كُنْتُمْ تُوْعَدُوْنَ.

''எவர்கள் 'அல்லாஹ் எங்கள் இறைவன்' என்று கூறி பின்னர் அதில் உறுதியாக நிலைத்து நின்றார்களோ, திண்ணமாக அவர்கள் மீது வானவர்கள் இறங்குகின்றார்கள். மேலும், அவர்களிடம் கூறுகின்றார்கள்; ''அஞ்சாதீர்கள்! கவலைப்படாதீர்கள்! உங்க ளுக்கு வாக்களிக்கப்பட்டிருக்கும் சுவனத்தின் நற்செய்தியினால் மகிழ்ச்சியடையுங்கள்!''

(41:30)

அத்தியாயம் - 2

மறுமை

மறுமையை முன் வைத்து வாழ்தல்:

இறைத்தொடர்புக்கு அடுத்தாற்போல், நான் உங்களுக்கு அறிவுறுத்தும் முக்கிய விஷயம் இதுவே: ஒவ்வொரு நிலையிலும் இம்மையை விட மறுமையை முன் வைத்தே வாழுங்கள்! மறுமை வெற்றியையும் ஈடேற்றத்தையும் மட்டுமே உங்களுடைய அனைத்துப் பணியின் இலக்காக அமைத்துக் கொள்ளுங்கள்.

நிலையான மிகச் சிறந்த தங்குமிடம் மறுமைதான் என்பதை திருக்குர்ஆன் நமக்கு உணர்த்துகிறது.

இந்த உலகில் உங்களுக்குக் கிடைத்திருப்பது ஒரு குறுகிய வாழ்வே! இங்கு நீங்கள் சோதிக்கப்படவே அனுப்பப்பட்டிருக்கிறீர்கள். அந்த சோதனை என்ன? இந்த அற்ப வாழ்வில் உங்களுக்கு ஒரு சில வளங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன; சில அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன; சில வாய்ப்புக்கள் தரப்பட்டிருக்கின்றன. இவற்றைக் கையாண்டு சிறப்பாகச் செயல்பட்டு, 'இறைவனுடைய சுவனத்தில் நிலையாக வசிக்க நாங்கள் தகுதியுடையவர்களே' என்பதை உங்களில் யார் நிரூபிக்கின்றார்கள் என்பதே அந்தச் சோதனை!

இங்கு நீங்கள் பெரும் தொழிற்சாலைகளை அமைக்கின்றீர்களா, பெரும் வணிக நிறுவனங்களை உருவாக்குகின்றீர்களா, பெரும் பெரும் விவசாய பூமியைப் படைத்திருக்கின்றீர்களா, மாபெரும் ஆட்சிகள் அமைத்து நடத்திச் செல்கின்றீர்களா, பிரமிக்கத்தக்க மாளிகைகள் - இல்லங்கள் கட்டுகின்றீர்களா, விசாலமான சாலைகள் அமைக்கின்றீர்களா, பகட்டான ஒரு நாகரிகத்தை உருவாக்குவதில் வெற்றி பெற்றிருக்கிறீர்களா, இவற்றுக்காக சாதனைகளை செயற்கரிய செயல்களை நீங்கள் வெளிப்படுத்தியிருக்கிறீர்களா? - இதுபோன்ற பணிகளில் சோதிக்கப்பட நீங்கள் அனுப்பப்படவில்லை. மாறாக, நீங்கள் சோதிக்கப்படுவது ஒரே ஒரு விஷயத்தில்தான்.

ஏக இறைவனின் பிரதிநிதி எனும் அந்தஸ்தில் அவன் உங்களிடம் ஒப்படைத்திருக்கின்ற அமானிதங்களைக் கையாள்வதில் எத்தகைய தகுதிகளை நீங்கள் வெளிப்படுத்துகின்றீர்கள்?

இறைவன் படைத்திருக்கின்ற இந்தப் பூவுலகில் அவனுடைய விருப்பத்தை நீங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறீர்களா அல்லது உங்கள் மன இச்சைகளைப் பின்பற்றிக் கொண்டும், இறைவனை விடுத்து மற்றவர்களின் கட்டளைகளை நிறைவேற்றிக் கொண்டும் இருக்கிறீர்களா?

இறைவன் படைத்திருக்கின்ற இவ்வுலகில் அவன் தந்துள்ள படித்தரங்களின்படி அதனை அழகுபடுத்த முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்களா, அல்லது உங்கள் மனம் போன போக்கில் அதனை அலங்கோலப்படுத்திக் கொண்டிருக்கிறீர்களா?

இறைவனின் உவப்பைப் பெறுவதற்காக சாத்தானிய சக்திகளுடன் போராடுகிறீர்களா அல்லது அவற்றுக்கு எதிரில் சரணடைந்து கிடக்கின்றீர்களா? ஆக நீங்கள் சோதிக்கப்படுவது இதில்தான்.

சுவனத்தில் ஆதிமனிதர் ஆதம் (அலை) அவர்களுக்கும் அவர்களுடைய துணைவி ஹவ்வா (அலை) அவர்களுக்கும் வைக்கப்பட்ட முதல் சோதனையும் இதுவாகவே இருந்தது. மறுமையில், ஆதத்தின் வழித்தோன்றல்களில் யார் யார் நிலையான சுவனத்தில் வசிக்க உரித்தானவர்கள் என்பதும் இந்தச் சோதனையின் அடிப்படையில்தான் தீர்மானிக்கப்படும்.

எனவே -

தேர்வுக் காலத்தில் எவர் அரியணையில் உட்கார்ந்து தேர்வு எழுதினார், எவர் தூக்குமர நிழலில் தேர்வு எழுதினார்;

எவர் மாபெரும் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து தேர்வு எழுதினார்;

எவர் சிறு குடிசையில் இருந்து தேர்வு எழுதினார் -

இவையெல்லாம், அந்த தேர்வின் வெற்றி - தோல்விக்கானதுலாக்கோலே அல்ல! இவற்றைக் கொண்டு, தேர்வு எழுதுகிறவர் மறுமையில் தோல்வியடைந்து விட்டார் என்று சொல்வதற்கில்லை.

நீங்கள் ஒரு விஷயத்தில் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். இம்மையில் நீங்கள் எந்த இடத்தில் எந்தச் சூழ்நிலையில் அமர்த்தப்பட்டு சோதிக்கப்பட்டாலும், நீங்கள் ஏக இறைவனின் வாய்மையான அடியாராகத் திகழ வேண்டும்; அவனுடைய

இசைவையும் உவப்பையுமே நீங்கள் பின்பற்றினீர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும். இதில்தான் நீங்கள் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுமே தவிர, தேர்வுக் காலத்தில் கிடைக்கும் வசதி வாய்ப்புகள், பதவிகள் குறித்து அல்ல!

அப்பொழுதுதான் இறைவன் தன் உண்மையான அடியார்க ளுக்கு மறுமையில் ஏற்படுத்தி வைத்திருக்கின்ற உன்னத அந்தஸ் திற்கு நீங்கள் உரியவர் ஆவீர்கள்.

சகோதரர்களே!

நம்முடைய வெற்றியின் இரகசியம் இதுதான்! ஆனால், இந்தப் பேருண்மையை ஏதாவதொரு தடவை புரிந்துகொண்டு ஏற்றுக்கொண்டால் மட்டும் போதாது.

மாறாக, அந்தப் பேருண்மை எப்போதும் உங்கள் உள்ளத்தில் பசுமையாக இருப்பதற்கு கடுமையான முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும். இல்லையெனில், நீங்கள் மறுமையை நிராக ரிப்பவர்களாக இல்லாதபோதிலும், இவ்வுலகில் மறுமையை மறந்து இம்மையையே இலக்காகக் கொண்டு செயல்படுவோரின் வழியிலேயே நீங்களும் நடைபோடக்கூடிய வாய்ப்புக்கள் எப்போ தும் இருந்துகொண்டே இருக்கும்.

இதற்குக் காரணம் இதுவே: மறுமை என்பது மறைவானது; புலனுணர்வுக்கு அப்பாற்பட்ட ஒன்று. மரணத்திற்குப் பிறகு வரக்கூடிய ஒன்று! மறுமை பற்றியும் அங்கு கிடைக்கும் நன்மை தீமைகளின் பலன்கள் பற்றியும் இங்கு நம் புலனுணர்வைக் கொண்டு உணர முடியாது. மாறாக, நம் உள்ளத்தால் சிந்திக்க மட்டுமே முடியும்.

இதற்கு நேர்மாறாக, இவ்வுலகம் நம் கண் முன்னால் இருக்கி றது; நம் புலனுணர்வுகள் அதனை சுவைத்துக் கொண்டிருக்கின் றன. அதன் இன்பங்களையும் அனுபவிக்கிறோம்; துன்பங்களை யும் அனுபவிக்கிறோம். அதேபோல், இணக்கமான மற்றும் இணக் கமற்ற இரு விளைவுகளும் நம் முன் வருகின்றன. இவையனைத் தும், 'உண்மை விளைவுகள் இவைதாம்' என்று நம்மை ஏமாற்றத் தில் ஆழ்த்திய வண்ணம் இருக்கின்றன.

மறுமையின் விஷயம் முற்றிலும் மாறுபட்டு இருக்கிறது. மறுமையில் நமக்கு பேரிழப்பு, பெரிய நாசம் ஏற்படுத்தக்கூடிய ஒரு பணியை நாம் செய்தால் நம் மனச்சாட்சி மிக லேசாக உறுத்துகிறது; ஆனால், இந்த உலகத்தில் ஏதாவது இழப்பு ஏற்பட் டாலோ, அதனை நம் உடலில் இருக்கின்ற ஒவ்வொரு உரோமமும்

உணர்கிறது. நம்முடைய மனைவி - மக்கள், உறவினர்கள், நண்பர்கள், சமூகத்திலுள்ள அனைவருமே அதனை உணர்கிறார் கள்; நமக்கும் உணர்த்துகிறார்கள்.

இதுபோலவே, மறுமையில் வெற்றி தரக்கூடிய ஒரு பணியை நாம் இவ்வுலகில் செய்யும்போது நம் உள்ளம் கொஞ்சம் குளிரவே செய்கிறது; அதிலும் நாம் விழிப்பு உணர்வுடன் இருக்கும்போது தான்! அலட்சியத்தில் இருக்கும்போது, அந்த உணர்வு சரிவரத் தோன்றுவதில்லை.

இதற்குப் பதிலாக இவ்வுலகத்தை செம்மைப்படுத்தும் - வெற்றி பெறச் செய்யும் ஒரு சாதனையை நாம் செய்து விட்டால் அதன் சுவையை நம் உடலும் உணர்கிறது. உள்ளமும் உணர்கிறது. நம்முடைய முழு ஆளுமையும் அதனைக் கணிக்கிறது. நம்முடைய புலனுணர்வு அனைத்தும் அதனை உணர்கின்றன. நம்முடைய இந்த உணர்வில் நம்மைச் சுற்றியிருப்பவர்கள் அனைவரும் பங்கு கொள்கின்றனர்; வாழ்த்துகின்றனர்.

இதனால்தான் மறுமையை ஒரு கோட்பாடாக ஏற்றுக்கொள் வது அதிகக் கடினமாக இல்லாதபோதிலும் அதனை நம் சிந்த னைப் பாங்காகக் கொள்வதும், நம்முடைய ஒழுக்கம், செயல்கள் ஆகியவற்றின் அடிப்படையாகக் கொண்டு, இறுதி மூச்சு வரை அதே பாங்கில் வாழ்வதும் நமக்கு மிகக் கடுமையானதாய் இருக்கி றது.

'இவ்வுலகம் மிகத் துச்சமானது' என உங்கள் நாவால் கூறிவிடு வது மிகவும் எளிதே! ஆனால், உலக மோகத்தை உள்ளத்திலிருந்து களைந்துவிடுவதும், உலகமே இலக்கு எனும் கருத்தை சிந்தையிலி ருந்து பூண்டோடு பிடுங்கி எறிந்து விடுவதும் அவ்வளவு எளிதான செயல் அல்ல! இந்தத் தன்மையும், தகுதியும் கடுமையான முயற்சி யின் வாயிலாகத்தான் நமக்குக் கிடைக்கிறது. மேலும், தொடர் முயற்சிகளாலேயே அது நிலைத்திருக்கிறது.

மறுமை சிந்தனைப் பயிற்சிக்கான வழிமுறைகள்

இப்பொழுது நீங்கள் கேட்கலாம்: ''மறுமைச் சிந்தனையை வளர்த்துக் கொள்ள எத்தகைய முயற்சிகளில் ஈடுபட வேண்டும்? எதனுடைய உதவியைப் பெற வேண்டும்?''

இதற்கு இரு வகையான வழிகள் உள்ளன. ஒன்று சிந்தனை ரீதியான வழிமுறை; இரண்டாவது, செயல்ரீதியான வழிமுறை.

சிந்தனை ரீதியான வழிமுறை இதுவே: நீங்கள் 'மறுமைநாளின் மீது நம்பிக்கை கொண்டேன்' என்று கூறுவதோடு நின்றுவிடாமல், குர்ஆனைப் பொருளறிந்து படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தொடர்ந்து இவ்வாறு படித்து வந்தால், சிறுகச் சிறுக மறுமை உலகத்தின் மீது உங்களுக்கு உறுதியான நம்பிக்கை ஏற்படும். இந்த உலகத்துக்குப் பின்னால், மறுமை மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் உங்களுக்குத் தென்படத் தொடங்கும்.

ஏதாவது ஒரு கோணத்திலிருந்து மறுமை பற்றிய நினைவூட்டல் இடம் பெறாத ஒரு பக்கமும் குர்ஆனில் இல்லை என்றால் அது மிகையாகாது. குர்ஆனில், ஆங்காங்கே மறுஉலகம் படம் பிடித்துக் காண்பிக்கப்பட்டிருக்கின்றது. ஒருவர் தம் கண்களால் நேரடியாகப் பார்த்துவிட்டு வந்து தெளிவாக விவரிப்பது போல் அமைந்துள்ளன குர்ஆன் அளிக்கும் மறுமை பற்றிய விவரங்கள்.

அது மட்டுமல்ல, பெரும்பாலான இடங்களில் மிக அற்புதமான முறையில் சொல்லப்பட்டுள்ள மறுமை வர்ணனைகளைப் படிக்கும்போது சற்று நேரம் மறுமை உலகிற்கே நாம் சென்று விட்ட உணர்வு நமக்கு ஏற்படுகிறது. இந்த உலகம் எனும் திரை கொஞ்சம் அகன்ற உடனேயே, எந்த வார்த்தைகளைக் கொண்டு மறுமை வர்ணிக்கப்படுகிறதோ, அந்தக் காட்சியை நாம் அப்படியே பார்க்கத்தான் போகிறோம். இந்த உறுதி குர்ஆனை தொடர்ந்து ஓதும்போது ஏற்படுகிறது.

எனவே, குர்ஆனைப் பொருளறிந்து நாள்தோறும் படிக்கும் வழக்கத்தை நீங்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலம் படிப்படியாக மறுமைச் சிந்தனை உங்களை ஆட்கொள்ளும். மேலும், மரணத்திற்குப் பிறகு நிரந்தரமாக தங்கும் இடத்திற்காக தேவையான ஏற்பாடுகளை உலகின் இந்தக் குறுகிய கால வாழ்விலேயே செய்துகொள்ள வேண்டும் என்ற சிந்தனை உங்களுக்கு ஒவ்வொரு விநாடியும் இருந்து கொண்டே இருக்கும்.

இந்த மனோநிலைக்கு மேலும் உரமூட்ட நீங்கள் நபிமொழிகளை ஆழ்ந்து படிக்க வேண்டும். நபிமொழிகளில் மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்வு குறித்த செய்திகள் அடிக்கடி வருகின்றன. தம் கண்களால் நேரடியாகப் பார்த்தவர் கூறுவதுபோல் தெளிவான விவரங்கள் நபிமொழிகளில் கிடைக்கின்றன. அத்துடன் அண்ணல் நபி (ஸல்) அவர்களும், அவர்களுடைய தோழர்களும் எந்த அளவு மறுமை நம்பிக்கையில் உறுதியுடன் இருந்தார்கள் என்பதையும் அறியலாம்.

மறுமைச் சிந்தனையை மனதில் இன்னும் ஆழமாய்ப் பதிக்க உதவுவது 'மண்ணறைச் சந்திப்புகள்' (ஜியாரத்தே குபூர்). இறந்தோரின் அடக்கஸ்தலங்களைப் பார்க்கச் செல்வதன் ஒரே நோக்கத்தை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு உணர்த்தியுள்ளார்கள்: 'உங்கள் உள்ளத்தில் மரணம் பற்றிய நினைவு பசுமையாக இருக்க வேண்டும்; ஏமாற்றும் உலக வாழ்வில் மூழ்கி மனிதன் பின்வரும் பேருண்மையை மறந்துவிடக் கூடாது. 'எல்லோரும் எந்த இடத்திற்குச் சென்று விட்டார்களோ - ஒவ்வொருவரும் சென்று கொண்டே இருக்கிறார்களோ - அந்த இடத்திற்கு - மண்ணறைக்கு நானும் ஒருநாள் சென்றே தீர வேண்டும்!' இதுவே அந்த நோக்கமாகும்.

ஆனால், ஓர் எச்சரிக்கை! பெரியோர்களின் - மகான்களின் அடக்கத்தலங்கள் நெறிபிறழ்ந்த கேந்திரங்களாய் மாற்றப்பட்டுள்ளன. அங்கு சென்று முறையிட்டால், தம்முடைய தேவைகள் நிறைவேறும்; தொல்லைகள் தீரும் என்று பலர் நினைக்கின்றனர். இந்த நோக்கத்துடன் செல்லும்போது நபிமொழியில் கூறப்பட்டுள்ள 'மறுமை நோக்கம்' மிகக் குறைவாகவே நிறைவேறும்.

அதற்குப் பதிலாக பாழடைந்த அடக்கத்தலங்களுக்கு செல்வதன் மூலம் அதிகம் பயன் பெறலாம். அல்லது பகட்டாகக் கட்டப்பட்டிருக்கும் அரசர்களின் மண்ணறைகளுக்குச் செல்லுங்கள். அங்குச் சென்று ஒரு நிமிடம் யோசித்துப் பாருங்கள்! இவர்கள் உலகையே கட்டி ஆளப் பிறந்தவர்கள் என்பது போல் அதிகாரம் செலுத்தியவர்கள்! முரசுகள் முழங்க, துந்துபி ஒலிக்க, அழகுத்தேர் ஏறி ராஜவீதியை வலம் வந்தவர்கள்! ஆனால் இன்று ஆறடி மண்ணுக்குள், யாருடைய துணையுமின்றி அடங்கிவிட்டார்கள்! இங்கு சிப்பாய்கள் இல்லை; சேடிகள் இல்லை; 'மன்னருக்கு மரியாதை செலுத்து' என்று ஆணையிட அமைச்சர் குழாம் இல்லை. அவர்களின் இந்த அவலநிலையைப் பார்க்கும்போது மரணமும் மறுமையும் நம் மனங்களில் நீங்கா நினைவுகளாய் பதிந்துவிடும்!

செயல் ரீதியான வழிமுறைகள்

நீங்கள் இவ்வுலகில் இருக்கும்போது, உங்கள் குடும்பவாழ்வில் ஈடுபடும்போது, உங்கள் பகுதிவாழ் மக்களுடன் - உறவினர்களுடன் தொடர்பு கொள்ளும்போது, கொடுக்கல் - வாங்கலில் ஈடுபடும்போது, ஆக வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும், ஒவ்வொரு அடியிலும் இரண்டு பாதைகள் உங்களை எதிர்நோக்கி

நிற்கின்றன. முதல் பாதை மறுமை நம்பிக்கையின் தேட்டத்தை நிறைவு செய்கிறது; அடுத்த பாதை உலகாயதத் தேட்டத்தை நிறைவு செய்கிறது. இத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உங்களின் கால்கள் முதல் பாதையிலேயே செல்ல முழு முயற்சியை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் மனத்தின் பலவீனத்தால், அல்லது அலட்சியம் காரணமாக நீங்கள் இரண்டாவது பாதையில் செல்லத் தொடங்கியிருந்தால், அந்தத் தவறை உணர்ந்த உடனேயே அதிலிருந்து திரும்ப முயலுங்கள். அந்தப் பாதையில் நீங்கள் எவ்வளவு தூரம் சென்று விட்டிருந்தாலும் சரியே!

அடுத்து, அடிக்கடி உங்களை நீங்களே சுயமதிப்பீடு செய்து கொள்ளுங்கள்; உங்கள் கணக்குகளை நீங்களே பாருங்கள். எத்தனை சந்தர்ப்பங்களில் உலகம் உங்களை தன்பால் ஈர்ப்பதில் வெற்றி கண்டிருக்கிறது; அதேபோல் எத்தனை சந்தர்ப்பங்களில் மறுமையின் பக்கம் செல்வதில் நீங்கள் வெற்றி பெற்றுள்ளீர்கள் என்று ஆய்வு செய்த வண்ணம் இருங்கள். உங்களிடம் மறுமை சிந்தனை எந்த அளவு இருக்கிறது; அது வளர்கிறதா, தேய்கிறதா அதில் எந்த அளவு குறைபாடு இருக்கிறது போன்ற விவரங்களை அந்த மதிப்பீடு உங்களுக்குத் துல்லியமாகக் காண்பித்து விடும்.

அடுத்து, எந்தக் குறைபாடுகளை உணர்கிறீர்களோ, அதனைக் களைய முயலுங்கள். இதற்காகப் புறத்திலிருந்து உங்களுக்குக் கிடைக்கும் அதிகபட்ச உதவி இதுவே: உலகாயதவாதிகளுடன் இருப்பதை விடுத்து, மறுமை சிந்தனையுள்ள சான்றோர்களுடன் வலுவான தொடர்பினை நீங்கள் வளர்த்துக் கொள்ளுங்கள். இந்த உலக நலன்களை விட மறுமையையே முன் வைத்து வாழ்பவர்களுடன் அதிக நேரத்தை செலவிடுங்கள். ஆனால், ஒரு விஷயத்தை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் சுயமாக முயற்சி செய்யாமலேயே, உங்கள் மனோநிலையில் அத்தகைய கருத்து இல்லாமலேயே, வெளிசக்திகள் அல்லது வெளி உதவிகள் உங்கள் இயல்பை மாற்றிவிடக் கூடியவை அல்ல. அவ்வாறு மாற்றிவிடக் கூடிய வழிமுறையை இன்றுவரை யாரும் உலகில் கண்டுபிடித்ததில்லை.

அத்தியாயம் — 3

தற்பெருமை

தற்பெருமை - ஒரு பேரபாயம்

நான் உங்களுக்கு அறிவுறுத்த விரும்பும் மூன்றாவது முக்கிய விஷயமாகும் இது. சில ஆண்டுகள் தொடர்ந்து முயற்சி செய்து வந்ததால், சிறிதளவு உங்களுடைய தனிப்பட்ட பண்பாட்டிலும், கூட்டு ஒழுக்கத்திலும், இயக்கக் கட்டுக்கோப்பிலும் சீர்திருத்தம் ஏற்பட்டிருக்கலாம். இதைக் குறித்து பெருமை உணர்வு உங்கள் உள்ளத்தில் ஒருபோதும் தலையெடுக்கக் கூடாது. தனிப்பட்டவர்களிடம் மட்டுமல்ல; ஒட்டுமொத்த இயக்கத்திடமும்தான். 'இப்போது நாம் முழுமையடைந்து விட்டோம்; நாம் எந்த உயர்ந்த நிலைக்கு வளர வேண்டுமோ அந்நிலைக்கு வளர்ந்து விட்டோம்; இனி அடைய வேண்டிய சிறப்பம்சம் எதுவும் எஞ்சியிருக்கவில்லை. எல்லாவற்றையும் முன்பே அடைந்துவிட்டோம்.' இத்தகைய தவறான கருத்தில் நம்மில் தனியொருவரும் உழலக் கூடாது; இயக்கமும் உழலக்கூடாது.

நானும் இயக்கத்தை நிர்வகிக்கும் இதர பொறுப்பானவர்களும் பல சமயம் மேற்சொன்ன சோதனைக்கு ஆளாக வேண்டியிருந்தது. இதனைக் குறித்து நான் மிகவும் எச்சரிக்கிறேன்.

நீண்ட காலமாகவே பலர் ஜமாஅத்தே இஸ்லாமி எந்த நோக்கத்திற்காக செயல்பட முன் வந்திருக்கிறதோ அதன் மதிப்பைக் குறைத்திட பின்வருமாறு பலத்த பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். 'இந்த ஜமாஅத் வெறும் ஓர் அரசியல் கட்சியாகும். பொதுவாக அரசியல் கட்சிகள் எப்படிச் செயல்படுமோ, அப்படித்தான் இதுவும் செயல்படுகிறது. உளத்தூய்மை மற்றும் ஆன்மிகத்தின் வாடைகூட இங்கு இல்லை. இறைத் தொடர்பு, மறுமை சிந்தனை போன்ற கருத்துக்களே இங்கு இல்லை.'

'இந்த இயக்கத்தை நடத்தும் தலைவர்களுக்கு பீர்கள் - குருக்கள் யாரும் இல்லை. இத்தலைவர்கள் எந்த குரு பீடத்திலிருந்

தும் தக்வா - இஹ்ஸான் அதாவது இறையச்சம் மற்றும் அழகிய நன்னடத்தைக்கான பயிற்சி பெற்றிருக்கவில்லை. இந்த இயக்கத் தின் தொண்டர்களுக்கும் அத்தகைய பயிற்சி கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கவில்லை.'

இதுபோன்ற தவறான பிரச்சாரங்கள் தொடர்ந்து பரப்பப்படு கின்றன. ஜமாஅத்தே இஸ்லாமியின் ஊழியர்களிடையேயும், அவர்களுக்கு ஆதரவு தருவோரிடையேயும் இத்தகைய தவறான கருத்துக்களைப் பரப்பி, அவர்களை அந்த குரு பீடங்களுக்கு திருப்பிட வேண்டும் என்பதுதான் அந்தப் பிரச்சாரங்களின் நோக்க மாகும்.

அந்தப் பீடங்களிலோ, இஸ்லாத்தின் போர்வையில் இறைநி ராகரிப்பின் (குஃப்ரின்) ஏதாவது ஒரு வகையிலான சேவையையே பெரும் சாதனை என்று கருதப்பட்டு வருகிறது. அங்கு ஒரு வாழ்க்கை அமைப்பு எனும் அந்தஸ்தில் முழு இறைநெறியை நிலைநாட்டும் - அதனை மேலோங்கச் செய்யும் கருத்தோட்டம் அறவே இல்லை. இன்னும் சொல்லப் போனால், இத்தகைய கருத்துக்கள் அங்கு தெரிவிக்கப்பட்டால், இது மார்க்கத்துக்குப் புறம்பான கருத்தோட்டம் என்று நிரூபிக்க விதவிதமான விதண்டா வாதங்கள் செய்யப்படுகின்றன. இறைநிராகரிப்பு, இறைமறுப் புக்கு எதிரில் இஸ்லாத்தை வெற்றிகரமான வாழ்க்கை முறையாக மேலோங்கச் செய்யும் சிந்தனை முற்றிலும் ஓர் உலகாயதவாதியின் சிந்தனைப் பாங்காக கருதப்படுகிறது.

இந்நிலையில், நாம் அந்த குரு பீடங்களில் காணப்படும் உளத்தூய்மைக்கும் இஸ்லாம் அறிவுறுத்தும் உளத்தூய்மைக்கும் இடையிலுள்ள வேற்றுமையைத் தெளிவுபடுத்த வேண்டிய நிர்ப் பந்த நிலைக்குத் தள்ளப்படுகிறோம். மேலும், உண்மையான இறையச்சம் என்பது என்ன, அழகிய நன்னடத்தை (இஹ்ஸான்) என்றால் என்ன என்பதையும் அதே சமயம் அந்த குருபீடங்களில், அதைச் சார்ந்த வல்லுநர்கள் அளிக்கும் பயிற்சியில் உருவாகும் இறையச்சம் எத்தகையது, 'இஹ்ஸான்' எத்தகையது என்பதையும் கோடிட்டுக் காட்ட வேண்டியதாக இருக்கிறது.

அத்துடன், ஜமாஅத்தே இஸ்லாமி வகுத்துள்ள சீர்திருத்தம், பயிற்சிக்கான திட்டம் என்ன? அதனால் ஏற்பட்டுள்ள விளைவுகள் என்ன என்பதையும் பிட்டுப் பிட்டுக் காண்பிக்க வேண்டியிருக்கி றது.

இவ்வாறாக, சரியான மார்க்க உணர்வுள்ள ஒருவரிடம் ஜமா அத்தே இஸ்லாமியின் தாக்கம் ஏற்பட்ட பிறகு, ஆரம்பக் கட்டத்தி

லேயே இறையச்சத்தின் - இஹ்ஸானின் (அழகிய நன்னடத்தை யின்) எத்தகைய நிலையை அவர் தமக்குள் ஏற்படுத்திக் கொள்கி றார் எனில், இதர குருபீடங்களில் வாழ்நாள் முழுவதும் உளத் தூய்மை பயிற்சி பெற்றவர்களிடம் அதன் வாடை கூட தென்படுவ தில்லை!

நம்மை ஆட்சேபிப்பவர்களின் அந்நிகளை வெளிப்படுத்த வேறு வழியின்றி நம் தரப்பு நியாயங்களை எடுத்துக்கூற வேண்டி யிருக்கிறது. நம்மைப் பாதுகாத்துக் கொள்ள இவற்றைக் கூற வில்லை; மாறாக, இஸ்லாமிய இயக்கத்தை காப்பாற்றுவதற்காக இவற்றைக் கூற வேண்டியிருக்கிறது. ஆனால், இவற்றைக் கூறும் போது, நாம் வல்ல இறைவனிடம் பாதுகாப்புத் தேடுகின்றோம். நம்முடைய இந்தப் பேச்சுக்கள் நமக்குள்ளும், நம் தொண்டர்கள் உள்ளத்திலும் நாம் முற்றிலும் சிறந்தவர்கள், சிறப்பின் சிகரத்தை அடைந்தவர்கள் எனும் அகந்தையையும், தற்பெருமையையும் ஏற்படுத்திவிடக் கூடாது. இத்தகைய தவறான கருத்துக்கு நாம் பலியாகக் கூடாது. இறைவன் நம்மைக் காப்பாற்றுவானாக! - இந்தத் தற்பெருமை நோய் நம்மைத் தொற்றிக் கொண்டுவிட்டால், இன்றுவரை நாம் எதனை அடைந்திருக்கிறோமோ, அதனை இழந்துவிடுவோம்.

பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகள்

இந்த அபாயத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள மூன்று விஷ யங்களை நீங்கள் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். அவற்றை எப்போதும் மறந்து விடக் கூடாது.

1. சிறப்பு என்பது ஒரு வரையறையற்ற தொடரான தன்மையா கும். அதனுடைய இறுதி எல்லை நம் பார்வையிலிருந்து மறைந்தி ருக்கிறது. எனவே, சிறப்பின் உச்சநிலையை அடைய தொடர்ந்து முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும். எந்த இடத்தை அடைந்துவிட்டாலும், தாம் முழுமை பெற்றுவிட்டோம் என்று நினைக்கக் கூடாது. இந்தத் தவறான கருத்து எப்பொழுது மனித னுக்குள் ஏற்படுகிறதோ, அந்த நிமிடமே அவனுடைய வளர்ச்சி அங்கேயே நின்று விடுகிறது. அதுமட்டுமல்ல; அது எதிர்திசை நோக்கி நடைபோடுகிறது. வீழ்ச்சியடையத் தொடங்குகிறது. நன்கு கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். ஒரு சிகரத்தில் ஏறுவதற்காக மட்டுமல்ல; அந்த உயர்ந்த இடத்தில் நிலைத்து நிற்கவும் தொடர்ந்து கடுமையாக உழைக்க வேண்டி இருக்கிறது.

அத்தகைய உழைப்பு என்றைக்கு நின்று விடுகிறதோ, அன்றே மனிதன் தாழ்வு அடையத் தொட்ங்கி விடுகின்றான். விவேகமான ஒரு மனிதன் எப்போதும் கீழே குனிந்து பார்க்க மாட்டான்; பார்த்துவிட்டு 'நாம் எவ்வளவு மேலே உயர்ந்து விட்டோம்' என்று மதிப்பிட மாட்டான். மாறாக, அவன் மேலே பார்த்த வண்ணம் இருப்பான். 'இன்னும் அடைய வேண்டிய உச்சிகள் - உயரங்கள் எவ்வளவோ இருக்கின்றனவே, நான் மிகவும் கீழே இருக்கின் றேனே. இன்னும் உயர தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டுமே' என்று ஆக்கரீதியாகத்தான் அவன் சிந்திப்பான்.

2. நம்முன் மனித இன சிறப்புக்காக, ஓர் உயர்ந்த படித்தரத்தை இஸ்லாம் வைத்திருக்கிறது. அதன் தொடக்க நிலைகளே இதர மதங்கள், தத்துவங்கள் அறிவுறுத்தும் சிறப்புப் படித்தரத்தை விட உயர்வாக இருக்கின்றன. இஸ்லாத்தின் இந்தக் கருத்து வெறும் கற்பனைக் கருத்தோட்டம் அல்ல! மாறாக, செயல்ரீதியாக நபிமார் கள், நபித்தோழர்கள், தோழியர்கள், இஸ்லாமியச் சான்றோர்கள் ஆகியோரின் தூய வாழ்வுகளில் இந்த சிகரங்களை, உன்னத நிலைகளைக் கண்கூடாகக் காண்கிறோம். அவர்களின் அந்தப் படித்தரத்தை எப்போதும் உங்கள் மனத்தில் பசுமையாக வைத்தி ருங்கள். பிறகு அது, 'நாம் முழுமை பெற்றுவிட்டோம்' எனும் தவறான கருத்துக்கு பலியாவதை விட்டு உங்களைக் காப்பாற்றிவி டும். உங்களின் தாழ்நிலையை உங்களுக்கு உணர்த்தும். இன்னும் இன்னும் உயர்வதற்காக உழைக்க வேண்டும் எனும் உறுதியையும், உத்வேகத்தையும் உங்களுக்கு அளிக்கும். எந்நேரமும் அந்தத் தூயவர்களின் வாழ்க்கை உங்கள் முன் சிறப்புக்களின் மாபெரும் சிகரங்களை வைத்துக் கொண்டே இருக்கும். இதனால், வாழ்நாள் முழுவதும் நீங்கள் கடுமையாக உழைத்த பிறகும், நாம் இன்னமும் முழுமையடையவில்லை; இன்னும் பல படிகள் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது எனும் உணர்வே உங்களிடம் மேலோங்கி நிற்கும்.

இன்று ஷைத்தானுடன் போராட களத்தில் நீங்கள் இறங்கி இருக்கின்றீர்கள்; இந்நிலையில், உங்களைச் சுற்றி இறுதி மூச்சு விட்டுக்கொண்டு இப்பவோ அப்பவோ என்றிருக்கும் நோயாளி களை ஒப்பிட்டுப் பார்த்து உங்களுடைய உடல்நலன் குறித்துப் பெருமையடையாதீர்கள். மாறாக, இதற்கு முன் ஷைத்தானுடன் போராடிய ஆன்மிக, ஒழுக்க பலசாலிகள் மீதே உங்கள் பார்வை யைப் பதித்து வையுங்கள்.

இறைநம்பிக்கையாளனின் பணி இது:- இறைநெறி எனும் செல்வத்தை மேலும் ஈட்ட வேண்டுமே எனும் ஆசை தணியாது

இருக்க, தன்னைவிட இந்தச் செல்வத்தை அதிகம் பெற்றிருப்பவர் களைப் பார்த்த வண்ணம் இருப்பான். உலகத்தின் செல்வம் பற்றிய அவனுடைய கருத்தோட்டம் முற்றிலும் நேர்மாறானது. அவன் எப்போதும் தன்னைவிடக் குறைந்த செல்வம் படைத்தவரையே பார்த்த வண்ணம் இருப்பான். இதனால் இறைவன் தனக்கு அளித்திருப்பதைக் கொண்டு மனநிறைவு கொள்வான். இறைவ னுக்கு நன்றி செலுத்தும் உணர்வுகள் அவனிடம் பொங்கி எழும். உலக செல்வம் பெற வேண்டும் எனும் தாகம் சிறிதளவு செல்வம் பெற்றவுடனேயே தணிந்துவிடும்!★

(3) நம்முடைய இந்த இயக்கம் சில சிறப்புக்களை நம்முள் தோற்றுவித்திருக்கிறது. நம்முடைய சுற்றுப்புறச் சூழல் மிகவும் மோசமாக இருப்பதால் நமக்குள் ஏற்பட்டிருக்கிற சிறப்புக்கள், நம் பார்வையில் பெரிதாகத் தென்படுகின்றன. காரிருளில் ஒளியூட் டும் சிறு மெழுகுவர்த்தி போல நமக்கும் கொஞ்சம் நற்பேறு கிடைத்திருக்கிறது. அந்தக் கடும் இருளுக்கு எதிரில் இந்தச் சிறு ஒளி எடுப்பாகத் தென்படுகிறது. ஆனால், உண்மை நிலை என்ன? இஸ்லாம் அறிவுறுத்துகின்ற குறைந்தபட்ச சிறப்புப் படித்தரத்தை வைத்து நீங்கள் சுயமதிப்பீடு செய்தால், ஒவ்வொரு திசையிலும், தனிப்பட்ட ரீதியிலும் சரி, அமைப்பு ரீதியிலும் சரி, உங்களுக்குக் குறைபாடுகளே தென்படும். எனவே, நம்முடைய குறைபாடு களை ஒப்புக்கொள்ள வேண்டும். தன்னடக்கத்துக்காக அல்ல! மாறாக, யதார்த்தத்தில் அந்தக் குறைபாடுகள் நம்மிடம் இருக்கின் றன எனும் அடிப்படையில்! பிறகு, அந்தக் குறைபாடு ஒவ்வொன் றையும் சரிவர புரிந்து அதனை பூண்டோடு பிடுங்கியெறிய முழு முயற்சி செய்ய வேண்டும்.

★இதே கருத்தை அண்ணலார் (ஸல்) அவர்கள் இவ்வாறு விளக்கியிருக்கி றார்கள். 'இறைநெறி விஷயத்தில் தன்னைவிட உயர்ந்தவர்களை எவன் பார்க் கின்றானோ, பிறகு அந்த நிலைக்கு உயர முயல்கின்றானோ, மேலும், உலக விவகாரங்களில் எவன் தன்னைவிட வசதி குறைந்தவர்களைப் பார்க்கிறானோ, பிறகு இறைவன் தனக்கு அருளியுள்ளதைக் குறித்து நன்றி செலுத்துகின்றானோ, இறைவனிடத்தில் அவன் பெயர் 'நன்றியுள்ளவன் - பொறுமையாளன்' என்று எழுதப்படும்.

இதற்கு நேர்மாறாக, இறைநெறி விஷயத்தில் தன்னைவிடத் தாழ்ந்தவரை எவன் பார்க்கிறானோ, மேலும், உலக வாழ்வின் விஷயத்தில் தன்னைவிட உயர்ந்தவர்களைப் பார்த்து தன்னிடம் அந்த அளவு உலக செல்வம் இல்லையே என்று ஏங்குகின்றானோ, அல்லாஹ்விடத்தில் அவனது பெயர் நன்றியாளன் என்றோ, பொறுமையாளன் என்றோ எழுதப்படுவதில்லை.''

அத்தியாயம் — 4

சுற்றுச் சூழலை சீர்திருத்துதல்

குடும்பத்தை சீர்திருத்துதல்

அடுத்து உங்கள் அனைவர்க்கும் நான் அறிவுறுத்துவது இதுவே: நீங்கள் உங்தள் குழந்தைகளின், உங்கள் குடும்பத்தாரின் சீர்திருத்தம் குறித்து சிறப்புக் கவனம் செலுத்துங்கள்.

திருக்குர்ஆன் கூறுகிறது:

قُوْا اَنْفُسَكُمْ وَاَهْلِيْكُمْ نَارًا.

''இறைநம்பிக்கை கொண்டவர்களே!... நரக நெருப்பிலிருந்து உங்களையும், உங்கள் மனைவி மக்களையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.'' (66:6)

உங்கள் குழந்தைகளின் - உங்கள் மனைவியரின் உணவு உடைகளுக்காக நீங்கள் கவலைப்படுகிறீர்கள். ஆனால், அவர்களை நரக நெருப்பிலிருந்து காப்பாற்ற வேண்டுமே எனும் கவலை அதைவிட அதிகமாக உங்களுக்கு இருக்க வேண்டும். உங்களால் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு சுவனத்தின் பாதையில் அவர்களை இட்டுச் செல்ல முழு முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறு முயன்ற பிறகும் அவர்களில் யாராவது நெறி பிறழ்ந்து சென்றால், அதற்கு நீங்கள் பொறுப்பாளி அல்ல! ஆயினும், அவருடைய மறுமையை பாழாக்குவதில் உங்களின் பங்கு இம்மியளவும் இருக்கக் கூடாது.

பல சமயம் என்னிடம் முறையீடுகள் வருகின்றன. இயக்கத் தொண்டர்கள் மக்களின் சீர்திருத்தத்திற்காக எந்த அளவு கவலைப் படுகிறார்களோ, அந்த அளவுக்கு தம் மனைவி - மக்கள் மற்றும் தம் குடும்பத்தாரின் சீர்திருத்தம் பற்றி கவலைப்படுவதில்லை என்று பலர் கூறுகிறார்கள். ஒரு சிலர் விஷயத்தில் இம்முறையீடு

கள் சரியாக இருக்கலாம்; சிலருடைய விஷயத்தில் அவை மிகைப் படுத்தப் பட்டதாகவும் இருக்கலாம். தனிப்பட்ட ஒவ்வொருவரின் நிலையையும் ஆய்ந்தறிவது எனக்குக் கடினமானதாகும். எனவே, இங்கு பொதுவான முறையில் ஓர் அறிவுரை வழங்குவதே போதுமானது என கருதுகிறேன். உலகில் யார் நம்முடைய அன்புக்குரியவர்களாய் இருக்கிறார்களோ, அவர்கள் சத்தியப்பாதையில் நடைபோடக் கூடியவர்களாகவும், நம்முடைய கண்களை குளிர வைக்கக் கூடியவர்களாகவும் விளங்க வேண்டும். அவ்வாறு அவர்களை விளங்கச் செய்ய நம் அனைவரிடமும் துடிப்பும் பேரார்வமும் இருக்க வேண்டும். அத்துடன் வாய்மையான முயற்சியும் வேண்டும்.

وَالَّذِيْنَ يَقُوْلُوْنَ رَبَّنَا هَبْ لَنَا مِنْ اَزْوَاجِنَا وَذُرِّيّٰتِنَا قُرَّةَ اَعْيُنٍ وَّاجْعَلْنَا لِلْمُتَّقِيْنَ اِمَامًا

''எங்கள் இறைவனே! எங்கள் மனைவியரையும், எங்கள் குழந்தைகளையும் எங்கள் கண்களுக்குக் குளிர்ச்சி அளிக்கக் கூடியவர்களாய் விளங்கச் செய்வாயாக! மேலும் எங்களை இறையச்சமுடையோருக்குத் தலைவர்களாய் திகழச் செய்வாயாக!'' (25:74)

இந்த விவகாரத்தில் தொண்டர்கள் தம்முடைய வாழ்வில் ஒருவருக்கொருவர் அக்கறை காட்ட வேண்டும். உங்களுடைய குழந்தைகளை மட்டுமல்ல; உங்கள் தோழர்களின் குழந்தைகளை சீர்மைப்படுத்துவதிலும் நீங்கள் பங்கு பெற வேண்டும். பல சமயம் இவ்வாறும் நடப்பதுண்டு. ஒரு குழந்தை தன்னுடைய தந்தையின் அறிவுரையை ஏற்றுக் கொள்வதில்லை; ஆனால், தன் தந்தையின் நண்பர்களின் அறிவுரைகளைக் கேட்டு ஏற்றுக் கொள்கிறது.

பரஸ்பர சீர்திருத்தம்

நான் மேலும் அறிவுறுத்துகின்றேன். நீங்கள் உங்களை சீர்திருத்திக் கொள்வதுடன் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் சீர்திருத்தம் செய்யவும் முயல வேண்டும். இறைவாக்கை மேலோங்கச் செய்ய

ஓர் அமைப்பாக செயல்பட முன் வந்திருப்பவர்கள் ஒருவருக்கொருவர் துணைபோகக் கூடியவர்களாயும் இருக்க வேண்டும். அவர்கள் ஒரு விஷயத்தை நன்கு புரிந்துகொள்ள வேண்டும். அமைப்பு ரீதியாக ஒழுக்கம், கட்டுக்கோப்பு ஆகிய கோணத்திலிருந்து தாம் வலுவாக இல்லாதவரை, தம் மாபெரும் இலக்கை அடைவதில் அவர்கள் வெற்றி பெற மாட்டார்கள். இந்த உணர்வின் விளைவு இவ்வாறு தென்பட வேண்டும். அவர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் பயிற்சியில் உதவியாளராய் விளங்க வேண்டும். அவர்களில் ஒருவர் மற்றொருவருக்கு ஆதரவு தந்து இறைபாதையில் முன்னேறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

இஸ்லாத்தில், கூட்டமைப்பின் உளத் தூய்மைக்கான வழிமுறை இதுவே! நான் விழுவதாகத் தெரிந்தால், நீங்கள் ஓடிவந்து என்னைத் தாங்கிப் பிடித்துக் கொள்ள வேண்டும். நீங்கள் தடுமாறுவதைக் கண்டால், நான் ஓடி வந்து உங்களைத் தாங்கிக் கொள்ள வேண்டும். என் மீது மாசு பட்டிருப்பதாகத் தென்பட்டால், நீங்கள் அதனைத் துடைத்திட வேண்டும்; உங்கள் மீது மாசுபட்டிருப்பதை நான் உணர்ந்தால், நான் அதனைத் தூய்மைப்படுத்திட வேண்டும்.

எந்த விஷயங்களில் என்னுடைய வெற்றியும், மேன்மையும் இருப்பதாய் நீங்கள் உணர்கிறீர்களோ, அவற்றை நான் அடைய நீங்கள் உதவ வேண்டும். எவற்றில் உங்களுடைய இம்மை மறுமையின் நலன் உள்ளது என்று நான் உணர்கின்றேனோ அவற்றை உங்களுக்கு நான் எத்தி வைக்க வேண்டும்.

இந்த உலகாயத வாழ்வில் மக்கள் கொடுக்கல் - வாங்கலில் ஈடுபடுவதினால் சமூகத்தில் செல்வச் செழிப்பு அதிகரிக்கிறது. ஒழுக்க - ஆன்மிக உலகிலும் இந்த பரஸ்பர உதவி, கொடுக்கல் - வாங்கல் முறை செவ்வனே நடந்தால், முழு அமைப்பின் ஒழுக்க முதலீடு எனும் செல்வச் செழிப்பு அதிகமாகிக் கொண்டே போகிறது.

பரஸ்பர சீர்திருத்தத்துக்கான வழிமுறை:

பரஸ்பர சீர்திருத்தத்துக்கான சரியான வழிமுறை இதுவே:

உங்கள் தோழரிடம் ஏதேனும் குறையிருப்பதாய் உங்களுக்குத் தென்பட்டால் அல்லது அவரைக் குறித்து உங்களிடம் ஏதேனும் முறையீடு இருந்தால், இவ்விவகாரத்தில் அவசரப்பட்டு செயல்படாதீர்கள். மாறாக, அந்த விஷயத்தை அனைத்து திசையிலிருந்தும் புரிந்துகொள்ள நீங்கள் முயற்சி செய்யுங்கள்.

பிறகு, உங்கள் நண்பரை தனிமையில் சந்தித்து அதைக் குறித்து பேசுங்கள். அதற்குப் பிறகும் அவரிடம் சீர்திருத்தம் ஏற்படவில்லை என்றால், விவகாரம் முக்கியமானது என்று நீங்கள் கருதினால், அப்போது அதனை உங்கள் தல அமீரின் (தலைவரின்) கவனத்துக்குக் கொண்டு வாருங்கள்.

தல அமீர் முதலில் தனிப்பட்ட முறையில் அதனை சீர்திருத்த முயற்சி செய்ய வேண்டும். பிறகு, அவசியம் எனக் கருதினால் அதனை தொண்டர்களின் அமர்வில் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த கால கட்டங்களில் பிரச்னை குறித்து தொடர்பில்லாதவர்களிடம் அதைப் பற்றி பேசுவதோ, அந்தக் குறிப்பிட்ட தோழர் எதிரில் இல்லாதபோது அவருடைய குறைகள் பற்றி சர்ச்சை செய்வதோ புறம் பேசுவதாகும். இதைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். இத்தகைய விவகாரங்களில் தல அமைப்பு முழு மனதோடு முயன்றும் வெற்றி பெற இயலவில்லையெனில், மாநில தலைமையகத்தையோ கேந்திரத் தலைமையகத்தையோ அணுகி இதற்கு தீர்வுகாண முயலலாம். ஆயினும் அத்தகைய ஒரு நிலைமை உருவாகும் வரை விவகாரங்கள் அந்தந்த மட்டங்களிலேயே சீர்படுத்தப்பட வேண்டும். எடுத்த உடனேயே மாநில அமைப்புக்கும், கேந்திரத்துக்கும் பிரச்னைகள் எடுத்துச் செல்லப்படுவது சரியான முறையல்ல!

கூட்டு விமர்சனமும் அதற்கான சரியான வழிமுறையும்

பரஸ்பரம் ஒருவர் மற்றவருடைய குறைகள் - பலவீனங்களைக் குறித்து விமர்சிப்பதும் கூட்டு முறையிலான சீர்திருத்தத்தின் ஒரு பலன் தரத்தக்க வழிமுறையாகும். ஆனால், விமர்சனத்துக்கான சரியான வரையறைகள் - ஒழுங்குமுறைகள் கடைப்பிடிக்கப்படாவிட்டால், இது பெரும் இழப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். எனவே, கூட்டு விமர்சனத்தின் வரையறையும், ஒழுங்கு முறையும் யாவை என்பதை இப்போது நான் தெளிவாக உங்களிடம் எடுத்து வைக்கிறேன்.

1. விமர்சனம் ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொரு அமர்விலும் செய்யப்படக் கூடாது. மாறாக, தல அமீர் இதற்காக ஏற்பாடு செய்யும் சிறப்புக் கூட்டத்தில் மட்டுமே விமர்சனம் செய்யப்பட வேண்டும். அல்லது தலஅமீரின் அனுமதி பெற்று செய்யப்பட வேண்டும்.

2. விமர்சகர், அல்லாஹ் தம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை நன்கு புரிந்துகொண்டு, 'வாய்மையின் அடிப்படையிலும் அந்தத் தோழரின் நன்மைக்காகவும்தான் நான் இந்த விமர்சனத்தை செய்கின்றேனா அல்லது வேறு ஏதேனும் சுய விருப்பு வெறுப்புகள் - மன இச்சைகள் காரணமாய் இந்த விமர்சனக் கணைகளை வீசுகின்றேனா' என்பதை முதலில் அவர் தம் நெஞ்சத்தை தொட்டுப் பார்த்து தெளிவு பெற வேண்டும். முதல் வகைதான் காரணம் எனில் நிச்சயமாக விமர்சனம் செய்ய வேண்டியதுதான். இல்லையெனில், விமர்சகர், தம் வாயை மூடிக் கொண்டு, தம் மனத்தை மாசுகளிலிருந்து காப்பாற்றுவதில் அக்கறை கொள்ள வேண்டும்.

3. விமர்சனத்தின் தொனி - மொழி ஆக இரண்டுமே எவ்வாறு அமைய வேண்டுமெனில், கேட்பவர் உண்மையிலேயே இது சீர்திருத்தத்துக்காகத்தான் செய்யப்படுகிறது என உணர வேண்டும். விமர்சனத்துக்காக வாயைத் திறக்கு முன் 'நாம் கூறும் ஆட்சேபணைக்கு தக்க அடிப்படை இருக்கிறது' என்ற திருப்தி முதலில் உங்களுக்கு இருக்க வேண்டும். ஆய்வு செய்யாமல், ஆதாரம் இல்லாமல் ஒருவருக்கு எதிராக ஏதாவது கூறுவது பாவமாகும். அதன் மூலம் குழப்பம்தான் தோன்றும்.

5. விமர்சிக்கப்படுபவர் தம் மீது சுமத்தப்படும் ஆட்சேபணையை பொறுமையுடன் கேட்க வேண்டும். நீதி நேர்மையுடன் அது குறித்து ஆய்வு செய்ய வேண்டும். ஆட்சேபணை உண்மைதான் எனில் அதனைத் தயக்கமின்றி ஒப்புக்கொள்ள வேண்டும். தவறு என்றால் ஆதாரங்களுடன் மறுதலிக்க வேண்டும். விமர்சனத்தைக் கேட்டவுடன் கோபத்தில் பொங்கியெழுவது உங்கள் உள்ளத்தில் அகந்தையும் தற்பெருமையும் இருக்கிறது என்பதற்கு அறிகுறியாகும்.

6. விமர்சனம் - பதில் விமர்சனம், பதிலுக்குப் பதில் என்று பிரச்னை முடிவின்றி தொடரக் கூடாது. அவ்வாறு தொடர்ந்தால் அதுவே ஒரு நிரந்தர சர்ச்சையாகி பிளவுக்குக் காரணமாக அமைந்து விடும். இரு சாராரிடமிருந்தும் பல்வேறு கோணங்களில் விளக்கங்கள் வெளிவராத வரையில்தான் பேச்சுவார்த்தைகள் நீடிக்க வேண்டும். அந்தக் கட்டத்திற்குப் பிறகும் பிரச்னை முடிவுறவில்லை என்றால் பேச்சுவார்த்தை ஒத்தி வைக்கப்பட வேண்டும். இதனால், சம்பந்தப்பட்ட இரு சாராரும் ஆற அமர, தத்தமது இடத்தில் விஷயங்களை ஆய்வு செய்ய வேண்டும். பிறகு, தேவைப்பட்டால், இன்னொரு கூட்டத்தில் இந்தப் பிரச்னை மீண்டும் கொண்டு வரப்படலாம். ஆனால், எந்நிலையிலும் உங்கள் அமைப்புக்

கட்டுக்கோப்பில், கருத்து வேறுபாடுள்ள பிரச்னைகளுக்கு இறுதித் தீர்ப்புகாணும் ஒரு கட்டம் இருக்க வேண்டும். அந்தக் கட்டத்தில் பிரச்னைக்கு தீர்வு கண்டுவிட்ட பிறகு சர்ச்சை அடியோடு நின்று விட வேண்டும்.

இந்த வரையறைகளை மதித்து செய்யப்படும் விமர்சனம் பயன் தரும் என்பதுடன் அமைப்பு ரீதியான வாழ்வை ஆரோக்கியமாக வைப்பதற்கும் இது முக்கிய தேவையாகும். ஆக்கபூர்வ விமர்சனம் இல்லாமல், எந்தவோர் அமைப்பும் நீண்ட நாள் சரியான பாதையில் நடைபோட முடியாது. இந்த விமர்சனத்தை விட்டு யாரும் மேலானவர் அல்லர். அவர் அமைப்பின் தலைவராக இருக்கலாம்; அல்லது ஆலோசனைக் குழு உறுப்பினராக இருக்கலாம்; அல்லது முழு அமைப்பாக கூட இருக்கலாம்! அமைப்பின் ஆரோக்கியத்தைக் காப்பாற்ற விமர்சனங்கள் தவிர்க்க முடியாதவை என்று நான் கருதுகின்றேன். எந்நாளில் நம் அமைப்பில் இத்தகைய விமர்சனத்தின் வாயில்கள் அடைக்கப்பட்டு விடுமோ, அந்நாளில் நம்முடைய வீழ்ச்சியின் வாயில்கள் திறக்கப்பட்டுவிடும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இதன் காரணமாகவே, தொடக்கத்திலிருந்து ஒவ்வொரு பொது அமர்விலும் உறுப்பினர்களின் ஒரு சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி அதில் அமைப்பின் பணிகள் - செயல்பாடுகள் குறித்து முழு விமர்சனம் செய்ய ஏற்பாடுகள் செய்கின்றேன். அத்தகைய அமர்வுகளில், அனைத்துக்கும் முதலாக என்னைப் பற்றிய விமர்சனங்களுக்கு நான் முதலிடம் தருகின்றேன். என்னைக் குறித்து அல்லது என் பணிகள் குறித்து யாருக்காவது ஆட்சேபணை இருப்பின், அந்தப் பொது அவையில், அனைவரின் முன்பாகவும் எந்தத் தயக்கமுமின்றி, என்னைப் பற்றி அவர் விமர்சிக்கலாம். இந்த விமர்சனத்தால் ஒன்று நான் சீர்திருத்தம் பெறுகின்றேன்; அல்லது நான் அளிக்கும் பதிலிலிருந்து விமர்சகருடையவும் அவரைப் போல் சிந்திக்கும் இதர தோழர்களுடையவும் தவறான கருத்துக்கள் களையப்படுகின்றன.

இத்தகைய ஓர் அமர்வு நேற்றிரவும் நடைபெற்றது. அதில் சுதந்தரமாக அனைவரும் என்னை விமர்சித்த காட்சியை தோழர்கள் அனைவரும் பார்த்திருக்கிறார்கள்.

புதிதாக வந்த தோழர்கள் அதைப்பார்த்து வேதனைப்பட்ட தாய்க் கேள்விப்பட்டு நான் வியந்தேன். அவர்களுக்கு எந்தக் காரணத்தினால் வேதனை ஏற்பட்டது என்று தெரியவில்லை. விரிவான கண்ணோட்டத்திலிருந்து அவர்கள் இதனைப் பார்த்தால்

அவர்களுடைய உள்ளத்தில் இந்த அமைப்பின் - இயக்கத்தின் கண்ணியம் முன்பை விட பன்மடங்கு அதிகமாகிவிடும். இந்த நாட்டில் முந்நூறு, நானூறு பேர் கூடுகிறார்கள்; பிறகு பல மணிநேரம் சுதந்தரமாக - வெளிப்படையாக விமர்சிக்கிறார்கள்; காரசாரமான விவாதங்களில் ஈடுபடுகிறார்கள். ஆயினும், நாற்காலிகள் வீசப்படுவதில்லை; மைக்குகள் பறப்பதில்லை; மண்டைகள் உடைவதில்லை; அதுமட்டுமல்ல, அந்த அமர்வு முடிந்த பிறகு யாருடைய உள்ளத்திலும் எவரைக் குறித்தும் குரோதம் இம்மியளவும் எஞ்சி நிற்பதில்லை. இத்தகைய நிலை நம்முடைய இந்த அமைப்பைத் தவிர வேறு எந்தக் கட்சியில், எந்த அமைப்பில்தான் காணப்படுகிறது?

அத்தியாயம் — 5

கீழ்ப்படிதல் — ஆணையிடுதல்

கீழ்ப்படியும் உணர்வை வளர்ப்பதன் முக்கியத்துவம்

மற்றொரு விஷயத்தை உங்களுக்கு உணர்த்த வேண்டுமென நான் கருதுகின்றேன். அது யாதெனில், கீழ்ப்படிதல் மற்றும் கட்டுக்கோப்பு உணர்வுகள் உங்களிடம் மிகவும் குறைவாகவே உள்ளன. நம்மைச் சுற்றி இருப்பவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், நம்மிடையே சிறந்த கட்டுக்கோப்பும், ஒழுங்குமுறையும் (Discipline) இருப்பதாகத் தென்படுகிறது. ஆனால், இது தொடர்பாக இஸ்லாம் வலியுறுத்துகிற படித்தரத்தை ஒருபுறம் பாருங்கள்; மறுபுறம் நாம் மேற்கொண்டுள்ள பணியின் கடினத்தைப் பாருங்கள்! இக்கோணங்களிலிருந்து பார்த்தால், நம்முடைய கட்டுக்கோப்பு மிகவும் துச்சமானதாகத் தென்படும். நாம் மிகச் சிலர், குறைந்த வசதிகளைக் கொண்டு களத்தில் இறங்கியிருக்கிறோம்; செய்ய வேண்டிய பணியோ மிகப்பெரியது. இறைவனுக்கு மாறு செய்வோரும் அஞ்ஞான சக்திகளும் நம்மைவிட பல்லாயிரம் மடங்கு அதிகமாக இருக்கின்றன; பல இலட்சம் மடங்கு வசதிகளைப் பெற்றிருக்கின்றன. நாமோ, குறைந்த ஆட்களுடனும் குறைந்த வசதிகள் கொண்டும் இந்த வாழ்க்கையமைப்பை வெளித் தோற்றத்தில் மட்டுமல்ல; அதன் உயிரோட்டத்தையே மாற்றியமைப்பதை இலட்சியமாய்க் கொண்டுள்ளோம்.

ஆள் பலத்தில் அல்லது வசதிகளின் கோணத்திலிருந்து பாருங்கள். உங்களுக்கும், எதிரில் இருப்பவர்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடு மிகப்பெரிய ஒன்று. ஒப்பிட்டுப் பார்க்கவே முடியாது. பிறகு, நீங்கள் அவர்களை எப்படி வெற்றி கொள்வீர்கள்? ஒழுக்கம் கட்டுக்கோப்பு எனும் வலிமையைத் தவிர வேறு எந்த சக்திதான் உங்களிடம் இருக்கிறது? ஆம், அவற்றைக் கொண்டே நீங்கள் வெற்றி பெற முடியும்!

உங்கள் அமானிதம் பேணும் பண்பின் - நேர்மையின் தாக்கங்கள் உங்கள் சுற்றுச் சூழல்களில் ஏற்பட வேண்டும். உங்கள் கட்டுக்கோப்பு மிகவும் வலுவாக இருக்க வேண்டும். எந்த அளவுக்கெனில், அமைப்பின் பொறுப்பாளர்கள் எந்த இடத்தில், எந்த அளவு மக்களை சேர்க்க விரும்பினாலும் அந்த வலிமையைத் திரட்டிட அவருடைய இந்த நேர்மைப் பண்பும், கட்டுக்கோப்புமே போதுமானதாய் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நீங்கள் இம்மாபெரும் இலக்கில் வெற்றியடைவீர்கள்.

ஷூரீஅத்தில் கீழ்ப்படிதலின் அந்தஸ்து

இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் தீனை நிலைநாட்ட முயலும் ஓர் அமைப்பின் தலைவருக்கு நன்மையான காரியங்களில் கீழ்ப்படிவது உண்மையில் இறைவனுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிவதின் ஓர் அங்கமாகும். ஒரு பணியை இறைவனின் பணி என்று நினைத்து ஒருவர் செய்கிறார்; இறை உவப்புக்காக ஒருவரை தம் தலைவராக ஏற்றுக் கொள்கிறார். பிறகு அந்தத் தலைவரின் நேர்மையான கட்டளைக்கு அவர் கீழ்ப்படிகிறார் எனில், உண்மையில் அவர் அந்தத் தலைவருக்கு அல்ல - மாறாக, அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும்தான் கீழ்ப்படிகிறார்.

ஒருவருடைய தொடர்பு அல்லாஹ்வுடனும் அவனுடைய நெறியுடனும் எந்த அளவு அழுத்தமாக இருக்குமோ, அந்த அளவு அவர் ஆணைகளுக்குக் கீழ்ப்படிவதிலும் முன்னிலையில் நிற்பார்; எந்த அளவு இறைத் தொடர்பில் குறைபாடு இருக்குமோ அந்த அளவு ஒருவரின் கீழ்ப்படிதலிலும் குறைபாடு காணப்படும்.

ஒருவருக்கு உங்கள் மீது எந்த ஆதிக்கமும் இல்லை; வெறும் இறைப்பணிக்காக அவரை உங்களின் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். அவருடைய ஆணையை ஒரு வாய்மையான பணியாள் போல் (Sub-Ordinate) நிறைவேற்றுகிறீர்கள். உங்களுடைய விருப்பம், ஆசை, நலனுக்கெதிராக அவர் கட்டளையிட்டாலும், அது உங்களுக்கு எவ்வளவு வெறுப்பாக இருந்தாலும் சரி - நீங்கள் அதனை மனமார நிறைவேற்றுகிறீர்கள்.

இந்தத் தியாகம், நீங்கள் அல்லாஹ்வுக்காக மட்டும் செய்கிறீர்கள். எனவே, அல்லாஹ்விடம் இதற்கான நற்கூலியும் மகத்தானதாகும்.

இதற்கு நேர்மாறாக, ஒருவர் இப்பணியில் இணைந்த பிறகும் எந்த நிலையிலும் பணிவாக இருக்க இசைவதில்லை. கீழ்ப்படிவது

தம் அந்தஸ்திற்குத் தாழ்வான செயல் என்று நினைக்கின்றார். அல்லது ஒரு கட்டளையைக் கேட்டு அவருடைய மனம் குமுறுகிறது. கசப்புடன் அவர் தனது வெறுப்பை வெளிப்படுத்துகின்றார்; அல்லது தன்னுடைய சுய நலன்களுக்கெதிரான கட்டளையை ஏற்க மிகவும் தயங்குகின்றார். இன்னும் அவருடைய மனம், அல்லாஹ்வின் முன் முழுமையாக சரணடையவில்லை; 'நான்' எனும் அகந்தையை (Ego) இன்னும் அவர் கைவிடவில்லை என்பதைத் தான் இது நிரூபிக்கிறது.

ஆணையிடுவோரின் போக்கு எவ்வாறு இருக்க வேண்டும்?

அமைப்பின் உறுப்பினர்களுக்கும் தொண்டர்களுக்கும், கட்டளைக்குக் கீழ்ப்படியும்படி அறிவுறுத்துவதுடன் கட்டளையிடும் தலைவர்களுக்கும் சில அறிவுரைகள் அவசியம் எனக் கருதுகின்றேன். முதலில் கட்டளையிடும் சரியான வழிமுறையை அவர் கற்றுக் கொள்ள வேண்டும். அமைப்பில் ஒருவருக்கு தலைமைப் பொறுப்பு அளிக்கப்படுகிறது; அவருக்குக் கீழ் செயல்பட உறுப்பினர்கள் சிலர் தங்களை ஒப்படைத்துக் கொள்கிறார்கள். இந்நிலையில், தாம் மற்றவர்களைவிட பெரியவர் என்று கருதத் தொடங்குவதும் தமக்குக் கீழ் இருக்கும் உறுப்பினர்கள் - தொண்டர்களுக்கு தகாத வகையில் கட்டளைகளை இடுவதும் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களுக்கு ஒருபோதும் ஆகுமானதல்ல!

ஒரு கட்டளையைப் பிறப்பிக்கும்போது, அவருடைய மனதில் 'நான் பெரியவன்' எனும் சுவை தட்டக் கூடாது. மாறாக, தம் தொண்டர்களிடமிருந்து மென்மையாகவும் இணக்கமாகவும் வேலை வாங்க வேண்டும். ஓர் உறுப்பினர் கீழ்ப்படியாமல் கிளர்ந்து எழும் அளவுக்கு கட்டளையிடுவோர் தவறான வழிமுறையைக் கடைப்பிடிக்கக் கூடாது. இதைக் குறித்து தலைமைப் பொறுப்பில் உள்ளோர் அஞ்சிய வண்ணம் இருக்க வேண்டும்.

இயக்கத்தில் இளைஞர்கள், முதியோர், பலமற்றவர்கள், வலிமையுள்ளவர்கள், வசதி பெற்றவர்கள், வசதியற்றவர்கள் என்று பல தரப்பினரும் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் ஒரே விதமாக நடத்திச் செல்லக் கூடாது. மாறாக, அமைப்பில் உள்ள பலதரப்பட்ட மக்களின் பிரத்யேக தனிப்பட்ட நிலைமைகளை நன்கு அறிந்து இருக்க வேண்டும். எவர் எந்தச் சலுகைக்கு உரியவரோ, அவருக்கு அந்தச் சலுகையை கட்டாயம் அளித்திட வேண்டும்.

ஆலோசனை வழங்கும் பாணியில் அல்லது வேண்டுகோள் விடும் முறையில் தலைவர் ஒரு விஷயத்தைச் சொல்கிறார் எனில், தொண்டர்கள் அதனை கட்டளையாக ஏற்று நிறைவேற்ற வேண்டும். இந்த வகையில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

தலைவரின் 'வேண்டுகோள்' எடுபடாமல் போய் அவர் வேறு வழியின்றி 'கட்டளை'யிடும் தேவையை உணர்கிறார் என்றால் அது அமைப்பின் கட்டுக்கோப்பில் உள்ள குறைபாட்டின் விளைவே!

ஊதியம் பெறும் இராணுவ வீரர்களுக்கு 'கட்டளை' அளிக்கப்படுகிறது. ஆனால், நம் இயக்க வீரர்கள் எப்படிப்பட்டவர்கள்? தம் மனமார்ந்த விருப்பத்துடன் இறை உவப்புக்காக இந்த அமைப்புடன் இணைந்தவர்கள்; தங்களுடைய இந்தப் பணிக்கு கூலியையோ, ஊதியத்தையோ எதிர்பார்க்காதவர்கள்; இறைப்பணிகளுக்காக தங்களுக்குள் ஒருவரை தாங்களே தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டவர்கள்; அந்தத் தலைவருக்குக் கீழ்ப்படியும் விஷயத்தில் இவர்களுக்குக் 'கட்டளை' இடவேண்டிய தேவையே இல்லை. 'உங்கள் இறைவனின் உவப்பைப் பெறுவதற்காக இன்ன இடத்தில், இன்ன பணியாற்றுவதற்கான வாய்ப்பு உங்களுக்கு இருக்கிறது' என்று தலைவரின் ஒரு சமிக்ஞை - ஒரு சாடை கிடைத்தாலே போதும் ஓடோடிச் சென்று அந்தப் பணியைச் செய்வதற்கு!

அமைப்பின் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் இடையில் என்றைக்கு இந்தத் தன்மை உருவாகி விடுகிறதோ, அன்றைக்கே, தலைவருக்கும் தொண்டர்களுக்கும் இடையில் காணப்படும் கசப்பு நொடிப்பொழுதில் ஆவியாகிப் பறந்து போய்விடும்!

அத்தியாயம் — 6

இறைவழியில் கடுமையாக உழைத்தல்

இந்தத் தொடரில் என்னுடைய கடைசி அறிவுரையாகும் இது. ஜமாஅத்தே இஸ்லாமியில் இணைந்திருப்போர் அனைவரும் இறைவழியில் கடுமையாக உழைக்கும் (முஜாஹிதா ஃபீஸபீலில் லாஹ்) உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும். அதாவது பொருள் ரீதியான, உடல் ரீதியான தியாகங்கள் புரியும் உணர்வுகளை அதிகரித்துக் கொள்ள வேண்டும். இறைப்பணிக்கு உங்கள் சொந்த வேலைகளைவிட முன்னுரிமை அளிக்க வேண்டும். இந்தப் பணிகளில் உங்களுக்கு இதயப்பூர்வமான ஈடுபாடு உருவாகிட வேண்டும். இறைப்பணியைச் செய்து முடிக்காத வரை நிம்மதியாக உட்கார முடியாது எனும் அளவுக்கு அந்த ஈடுபாடு இருக்க வேண்டும்.

நீங்கள் மட்டும் முஸ்லிமாக விளங்கினால் போதாது; உங்கள் சட்டைப்பையையும் முஸ்லிமாக விளங்கச் செய்ய வேண்டும். உடல், உயிர், நேரம் ஆகியவற்றில் இறைவனுக்கு உரிமை இருப்பது போலவே, உங்கள் செல்வத்திலும் இறைவனுக்கு உரிமையுண்டு என்பதை ஒருபோதும் மறந்து விடாதீர்கள்.

இந்த உரிமை குறித்து குறைந்தபட்ச வரையறையை இறைவனும், அவனுடைய தூதரும் நிர்ணயித்து விட்டார்கள். ஆனால், அதிகபட்ச வரம்புகளை நிர்ணயிக்கவில்லை. இந்த வரம்பை நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

'இறைவன் எனக்கு அளித்திருக்கும் செல்வத்தில் இருந்து, எந்த அளவுக்கு செலவு செய்தால் நான் இறைவனின் உரிமையை நிறைவேற்றியவன் ஆவேன்?' என்பதை உங்கள் மனசாட்சியிடம் கேளுங்கள்.

இது தொடர்பாக யாரும் யாருக்கும் நீதிபதியாக விளங்க முடியாது. இந்த விஷயத்தில் சிறந்த நீதிபதி அவருடைய மனசாட்

சியும், இறைநம்பிக்கையுமே ஆகும். ஆயினும், இங்கு நான் ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இறைவனையும், மறுமையையும் நம்பாதவர்களின் செயல்முறையிலிருந்து நீங்கள் ஒரு படிப்பினை பெற வேண்டும். அவர்கள் தங்களின் அசத்தியக் கொள்கைகளின் வளர்ச்சிக்காக, அவற்றை மேலோங்கச் செய்வதற்காக விதவிதமான தியாகங்கள் புரிகிறார்கள்; இறைவனையும் மறுமையையும் நம்பாதிருந்தும், தம்முடைய அசத்தியக் கொள்கைகளை வளர்ப்பதற்காய் - அவற்றை மேலோங்கச் செய்வதற்காய் அவர்கள் புரியும் தியாகங்களைப் பார்த்து, இறைவனையும் மறுமையையும் நம்பும் நமக்கு வெட்கம் வர வேண்டும்!

இறைநெறியை (தீனை) நிலைநாட்டும் பணியில் நம் தொண்டர்களிடம் - உறுப்பினர்களிடம் போதிய அளவு ஊக்கம் இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. சில தொண்டர்கள் சந்தேகமின்றி முழு வேகத்துடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கண்டு மனம் மகிழ்ச்சி அடைகிறது. உள்ளத்திலிருந்து அவர்களுக்காக நல்வாழ்த்துக்கள் கிளம்புகின்றன. ஆனால், பலரோ அத்தகைய வேகத்துடன் செயல்படுவதாகத் தென்படுவதில்லை...!

ஒருபுறம், இறைவனுக்கு மாறு செய்யும் போக்கும், பாவங்களும் சமூகத்தில் மலிந்து கிடக்கின்றன. மறுபுறம், இறைநெறி இயலாமையில் கிடக்கிறது. இந்தக் காட்சியைப் பார்க்கும் ஓர் இறைநம்பிக்கையாளனின் நெஞ்சம் நெருப்பாய் எரிய வேண்டும். அதன் வெப்பத்தால் அவன் கிளர்ந்தெழ வேண்டும். ஆனால், குறைவானவர்களிடமே அத்தகைய வெப்பம் காணப்படுகிறது.

உங்கள் குழந்தை நோய்வாய்ப்பட்டிருக்கிறது. அல்லது உங்கள் வீட்டில் விபத்துக்கான அபாயம் ஏற்பட்டிருக்கிறது என்று வைத்துக்கொள்வோம்.

அப்பொழுது உங்கள் செயல்பாடு எப்படி இருக்கும்? அமைதி இழந்து துடி துடித்துப் போய்விடுவீர்கள் அல்லவா? தீமைகள் மலிந்திருப்பதையும் இறைநெறி முடங்கியிருப்பதையும் பார்த்து குறைந்தபட்சம் அந்த அளவுக்காவது துடித்தெழக் கூடாதா?

'நீ இந்த அளவு வேகமாக செயல்பட வேண்டும்; இந்த அளவு முனைப்பாக இருக்க வேண்டும்' என்றெல்லாம் ஒருவர் இன்னொருவருக்கு வரம்பு கட்டக் கூடிய விஷயமல்ல இது. ஒவ்வொருவரும் அவரவரின் நெஞ்சில் கை வைத்து மனசாட்சிக்கு விரோதமில்லாமல் முடிவு செய்ய வேண்டிய விஷயம் இது. 'சத்திய உணர்வின்

தேட்டத்தை நிறைவு செய்யும் அளவுக்கு நான் பணியாற்றியுள்ளேனா?' எனும் கேள்விக்கு உங்களின் அந்தச் சுயமதிப்பீடு துல்லியமான விடையைக் கூறும்.

ஆயினும், அசத்தியவாதிகளின் தீவிர ஈடுபாடுகள் மற்றும் உத்வேகத்தின் மீது ஒரு பார்வை செலுத்துவதே நீங்கள் படிப்பினை பெறுவதற்கு போதுமானதாகும். அவர்கள் உலகில் அசத்திய நெறிகளை மேலோங்கச் செய்ய முழுமூச்சுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்! அதற்காக, தம்முடைய ஆற்றல்கள் அனைத்தையும் செலவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்!

அத்தியாயம் - 7

எதிர்ப்புகள்

எதிர்ப்புகளின் வெட்ககரமான - அறிவுக்குப் புறம்பான நிலை

அண்மைக் காலத்தில் நமக்கு எதிராகப் பெரிய அளவில் கிளப்பி விடப்பட்டிருக்கும் எதிர்ப்புகள் குறித்து சுருக்கமாக சில வார்த்தைகள் கூறுகின்றேன். அறிவு ரீதியான, ஆதாரப்பூர்வமான கருத்து வேறுபாடு ஒன்று இருக்கிறது. அதன் நோக்கம் விஷயத்தைப் புரிந்து கொள்வதும் புரிய வைப்பதுமாக இருக்கும். அதன் பின்னணியில் நன்நோக்கமும், சத்தியத்தை நேசிக்கும் வேட்கையும்தான் இருக்கும். இத்தகைய கருத்து வேறுபாடுகளை நாம் எப்போதும் தவறானவை என்று நினைக்கவில்லை; இறைவன் அருளால் இனியும் அவ்வாறு கருத மாட்டோம்.

நாமே பல தடவை பலருடன் பலதரப்பட்ட விஷயங்கள் குறித்து கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறோம். அப்படியிருக்க மற்றவர்களின் கருத்து மாறுபடும் உரிமையை நாம் எப்படி மறுப்போம்? ஆனால், துரதிருஷ்டவசமாக இன்று நம்மை எதிர்ப்பவர்களில் மிகவும் குறைவானவர்களே ஆக்கபூர்வமான கருத்து வேறுபாடுகளைக் கொண்டுள்ளனர். அந்த ஒரு சிலரை விட்டு விட்டு நம்மை எதிர்க்கும் பெரும்பான்மையினரின் நிலை என்ன என்று பார்ப்போம்.

அவர்கள் அபாண்டங்களை நம் மீது திணிக்கிறார்கள். தவறான கருத்துக்களை இட்டுக்கட்டி நாம் கூறியதாகச் சொல்கிறார்கள். நம்முடைய எழுத்துக்களைப் பிரித்தும் திரித்தும் ஒடித்தும் வளைத்தும் தம் மனம்போன போக்கில் அதற்குப் பொருள் கற்பிக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் செய்வதன் நோக்கம், நம்மைச் சீர்படுத்த வேண்டும் என்பதோ, மக்களைச் சீர்படுத்த வேண்டும் என்பதோ அல்ல. மாறாக, நம்மைப் பற்றிய தவறான கருத்துக்களை மக்களிடையே பரப்பிட வேண்டும்; மேலும் ஓர் இஸ்லாமிய அமைப்பை உருவாக்க நாம் மேற்கொள்ளும் முயற்சி

களை எந்த வகையிலாவது முறியடிக்க வேண்டும் என்பதே அவர்களுடைய இந்த எதிர்ப்பின் நோக்கமாகும்.

பொய்யின் இந்தப் புயலை எழுப்புவதில் பல்வேறு பிரிவினர்கள் இணைந்திருக்கின்றனர். ஒருபுறம் ஆளுங்கட்சித் தலைவர்களும் அவர்களைச் சார்ந்த பத்திரிகையாளர்களும் இருக்கிறார்கள். இந்நாட்டில் இஸ்லாமிய ஆட்சிக்காக ஓர் இயக்கம் பாடுபடுவது அவர்களுக்கு அருவருப்பாக இருக்கிறது.

மறுபுறம், மேற்கத்தியவாதிகள், நாத்திகர்கள், இறைவனுக்கு மாறு செய்பவர்கள், எந்த வரம்புகளுக்கும் கட்டுப்பட மாட்டோம் எனக் கூறுபவர்கள் இருக்கிறார்கள். இஸ்லாமியக் கொள்கை மற்றும் ஒழுக்க விதிமுறைகள் தங்களின் வரம்பு மீறிய சிந்தனை - செயல் சுதந்திரத்தை எங்கே கட்டுப்படுத்தி வைத்துவிடுமோ என்ற அச்சம் இவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, இவர்கள் இந்த இயக்கத்தை அருவருப்பாய் பார்க்கிறார்கள்.

இன்னொரு புறம் பல்வேறு நெறிபிறழ்ந்த கூட்டங்கள் இருக்கின்றன. இங்கு ஓர் இஸ்லாமிய அமைப்பு ஏற்பட்டுவிட்டால், தங்களின் வழிகேடுகளைப் பிரச்சாரம் செய்யும் வாய்ப்பே இருக்காது என்று அவர்கள் அஞ்சுகிறார்கள்.

இன்னொரு பக்கம் பொதுவுடைமைவாதிகள் இருக்கிறார்கள். தம்முடைய பாதையில் பெரும் தடை ஏதாவது இருக்கிறதென்றால் அது ஜமாஅத்தே இஸ்லாமிதான் என்பதை அவர்கள் நன்கு அறிந்துள்ளார்கள்.

இவர்கள் அனைவருடைய எதிர்ப்பும் ஓரளவு இயற்கையானதே! அது இல்லாமலிருந்தால்தான் வியப்பு ஏற்பட்டிருக்கும். சத்தியத்தை அசத்தியத்தைக் கொண்டு ஒடுக்கும் முயற்சியை இவர்கள் தவறானது என்று கருதவில்லை. இதுவும் எதிர்பார்க்கப் பட்ட ஒன்றே! ஆனால், நம் முழு அமைப்புக்கும் ஏற்பட்டுள்ள வேதனை இந்த எதிர்ப்பு அணியில் தேவ்பந்த் உலமாக்கள் சிலரும், அஹ்லே ஹதீஸ் உலமாக்கள் சிலரும் காணப்படுவதுதான்! அதை விட வேதனை என்னவென்றால், பொய்களையும், குழப்பங்களையும் ஏற்படுத்துவதில், பரப்புவதில் அந்த நெறிபிறழ்ந்த தோழர்களைவிட இந்த உலமாப் பெருமக்கள் ஒருபடி மேலே சென்றுவிடுகின்றார்கள்.

இவர்களுடைய இந்தப் பிரச்சாரத்தைக் கண்டு நாம் வேதனையடைகிறோம். இதன் பொருள், அவர்களுடைய வலிமையைக் கண்டு நாம் அஞ்சுகிறோம் என்பதல்ல; மாறாக, இவர்களை நாம் இறையச்சமுடையவர்கள், இறைநெறியைக் காக்கக் கூடியவர்கள்

என நினைத்தோம். அவர்கள் இப்படி இருப்பார்கள் என ஒருபோதும் நாம் கருதவில்லை.

இஸ்லாமியப் புரட்சியைக் கொண்டு வருவதில் இவர்கள் முன்னிலையில் நிற்பார்கள்; அவர்களைப் பின்பற்றி நாம் செல்வோம் என்றுதான் நாம் ஆசைப்பட்டோம். ஆனால், அந்தோ பரிதாபம்! கம்யூனிஸ்டுகள், நபிமொழியை நிராகரிப்பவர்கள், காதியானிகள், மேற்கத்திய அனாச்சாரங்களின் கொடி தாங்கிகள் ஆகியோருடன் சேர்ந்து இவர்களும் நம்மீது தாக்குதல் நடத்துகிறார்கள்; நம்மை எதிர்த்துப் பிரச்சாரம் செய்கிறார்கள். 'என்ன விதைக்கிறோம்? என்ன அறுவடை செய்யப் போகிறோம்?' என்பதை இவர்கள் சற்று யோசித்திருக்கக் கூடாதா?

எதிர்ப்புகளுக்கு எதிரில் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

ஆக, நிலைமை எவ்வாறாக இருப்பினும் அனைத்து திசைகளிலிருந்தும் நமக்கு எதிராக பிரச்சாரம் செய்யப்படுகிறது. இந்நிலையில் நம் தொண்டர்களுக்கு சில அறிவுரைகளை வழங்க நான் விரும்புகிறேன்.

இத்தொடரில் எனது முதல் அறிவுரை இது: நீங்கள் எந்நிலையிலும் ஆத்திரமடையாதீர்கள். உங்கள் நாவையும் உங்கள் போக்கையும் கட்டுப்பாட்டில் வையுங்கள். உங்களுக்கு ஆத்திரம் ஏற்படுவதாகத் தோன்றினால், இது ஷைத்தானின் ஊசலாட்டம் என்று கருதி, அல்லாஹ்வின் பாதுகாப்பைத் தேடுங்கள். உண்மை யாதெனில், இந்தப் பணியினைக் கெடுப்பதற்காக ஷைத்தான்தான் இந்த சதிகளைச் செய்கின்றான். அவன் ஒருபுறம் நம் எதிரிகளிடம் சென்று அவர்களை ஊக்குவிக்கின்றான். தகாத தாக்குதல்கள் நடத்த வைக்கின்றான். மறுபுறம் நம்மிடம் வந்து ஊக்குவிக்கின்றான். பதிலுக்கு பதில் சொல்ல வேண்டும்; அதிலே நாம் சிக்கிக் கொண்டிருக்க வேண்டும் என முயல்கின்றான். இவ்வாறாக, அவனுக்குப் பெரும் அருவருப்பாக இருக்கும் இந்தத் தூய பணியை நாம் செய்துவிடக் கூடாது என்று நினைக்கின்றான். எனவே, அவனுடைய வலையில் நாம் விழாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இரண்டாவது அறிவுரை: உலமாப் பெருமக்கள் சிலருடைய போக்கும் அவர்களுடைய மாணவர்கள், சீடர்களுடைய போக்கும் உங்களுக்கு எவ்வளவு வருத்தத்தை ஏற்படுத்தினாலும் அது 'வருத்தம்' எனும் அளவில்தான் இருக்க வேண்டுமே தவிர, வெறுப்பின்

எல்லைக்கு இட்டுச் சென்றுவிடக் கூடாது. மேலும், இதற்கு முன்னர் சிலர் செய்த தவறுகளை நீங்கள் புரிந்துவிடக் கூடாது. அவர்கள் உலமாக்கள் சிலரின் அதீத செயல்களைப் பார்த்து கோபமடைந்தார்கள். பிறகு, அனைத்து உலமாக்களையும் சாடத் தொடங்கிவிட்டார்கள். அதுமட்டுமல்ல, இறைநெறியின் அறிவைப் பெறுவதையும் தூற்ற ஆரம்பித்துவிட்டார்கள். நீங்கள் நன்கு கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இன்றும் உலமாக்களில் பெரும்பாலோர் இறையருளால் சத்தியத்தை விரும்புபவர்களாகவும், சத்தியத்தைப் போற்றுபவர்களாகவும் இருக்கிறார்கள். அது மட்டுமல்ல; அவர்களிலிருந்தே உங்களுக்குச் சிறந்த தோழர்கள் கிடைத்திருக்கிறார்கள்; இன்னும் கிடைத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

மூன்றாவது அறிவுரை இது: எதிர்ப்புக் கணைகளுக்குப் பதில் கூறும் பணியை நீங்கள் என்னிடம் விட்டு விடுங்கள். நீங்கள் உங்கள் பணிகளில் முனைப்பாக ஈடுபடுங்கள். எந்த அளவு பதில் சொல்ல வேண்டுமோ எந்த அளவு தற்காப்பு வாதங்கள் புரிய வேண்டுமோ அதனை நான் செய்வேன்; அல்லது அமைப்பின் பொறுப்பாளர்கள் வாயிலாக பதில் கொடுக்க வைப்பேன். உங்கள் பணி இதுவே: அபாண்டமான குற்றச்சாட்டுக்கள் ஏதேனும் உங்கள் முன் வந்தால், ஜமாஅத்தின் வெளியீடுகளிலிருந்து அதற்குரிய பதிலை எடுத்து அவர்களுக்குக் காண்பித்து விடுங்கள். அதற்குப் பிறகும் ஒருவர் உங்களை வாதத்தில் ஈடுபடும்படிச் செய்தால், அவர்களுக்கு 'ஸலாம்' கூறிவிட்டு விலகி விடுங்கள்.

பயணம் செய்ய விரும்பும் ஒருவர் மேற்கொள்ள வேண்டிய விவேகமான வழிமுறை இதுவே: பாதையில் அவருடைய சட்டை முட்செடியில் மாட்டிக் கொண்டால், ஒரு சில நிமிடங்கள் அங்கு நின்று அந்த சட்டையை முள்ளிலிருந்து எடுக்க முயல்வார். ஆனால், எவ்வளவு முயன்றும் அதை எடுக்க முடியவில்லை; நேரமோ ஓடிக்கொண்டே இருக்கிறது; பயணம் தடைபடும் என்ற கடும் அச்சம் ஏற்படும் நிலையில் அவர் தன் சட்டையின் அந்தப் பகுதியை கிழித்து முட்செடியிலேயே விட்டு விட்டு முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும். (அதனுடன் போராடிக் கொண்டு நேரத்தையும் பயணத்தையும் வீணாக்கக் கூடாது.)

நான்காவது அறிவுரை இது:

மிக மோசமான - கடுமையான எதிர்ப்புக்கு மத்தியிலும் நீங்கள் அல்லாஹ்வின் வரம்புகளை ஒருபோதும் மீறாதீர்கள். நீங்கள் கூறும் எந்த ஒரு வார்த்தையும், நீங்கள் எழுதும் எந்த ஓர் எழுத்தும் சத்தியத்துக்கு எதிரானதாய் இருக்கக் கூடாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். சத்தியத்துக்கு எதிராக வெளிப்படுத்தும்

வார்த்தைகளுக்காக நீங்கள் வல்ல இறைவனிடம் பதில் சொல்ல வேண்டி வரும்! உங்களை எதிர்ப்பவர்கள், இறைவனுக்கு அஞ்சலாம்; அஞ்சாமலும் இருக்கலாம். ஆனால் நீங்களோ எந்நிலையிலும் இறைவனுக்கு அஞ்சிய வண்ணம் இருக்க வேண்டும்.

ஐந்தாவது அறிவுரை இது:

இந்த எதிர்ப்புகள் உங்களுடைய இயக்கம் வளரவும், பரவவும் அசாதாரணமான ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கின்றன. இதிலிருந்து முழுப்பயனை அடையுங்கள். 'இந்த எதிர்ப்புகள் அனைத்தும் இறைவனின் ஏற்பாடே...! இக்கட்டத்தில் நாம் வாய்மையாகச் செயல்பட்டால், அதன் மூலம் இறைவன் நம்மையும் நம் இயக்கத்தையும் மேலோங்கச் செய்துவிடுவான்' என்று நம்புங்கள். எதிர்ப்புகளைக் கண்டு பீதி அடையாதீர்கள். மாறாக, உங்கள் இலக்கு நோக்கிய பணிகளில் மும்முரமாக ஈடுபடுங்கள்.

அன்று அரேபியாவில் இதைவிடக் கடுமையான பிரச்சாரப் புயல் அண்ணலார் (ஸல்) அவர்களுக்கு எதிராகக் கிளப்பப்பட்டது. அப்போது வல்ல இறைவன் அண்ணலாருக்கு இவ்வாறு நற்செய்தி கூறினான்:

وَرَفَعْنَا لَكَ ذِكْرَكَ

''உமக்காக உம் புகழினை உயர்த்தினோம்.'' (94:4)

நாம் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். இவ்வளவு பரவலாக இலவசமாக நம்மைப் பற்றி விளம்பரம் செய்யப்படுகிறது. இருபது ஆண்டுகளாக நம் வசதிகளைக் கொண்டு நம்மால் செய்ய முடியாதிருந்த ஒரு பணியை இந்த எதிர்ப்புகள் செய்து விட்டிருக்கின்றன. இப்போது நாம் செய்ய வேண்டியது இதுவே: எங்கெங்கு நாம் தவறாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறோமோ, அங்கங்கு சென்று நம்முடைய சரியான அறிமுகத்தை நாம் செய்திட வேண்டும்.

இறைவன் நாடினால், இந்த முயற்சிக்கு இரண்டு பலன்கள் கிடைக்கும். இந்தப் பிரச்சாரம் தவறானது என்று யார் உணர்ந்து கொள்கிறாரோ, அவர் இந்த இயக்கத்தை நேசிப்பவராக மாறிவிடுவார். எவர்களுடைய பொய்ப்பிரச்சாரத்தை அவர் கண்கூடாகப் பார்க்கின்றாரோ, அவர்களைப் பற்றிய மதிப்பும் கண்ணியமும் அவர் உள்ளத்தில் இருக்காது. இதனால்தான் 'ஷைத்தானின் சதித்திட்டங்கள் பலவீனமானவை' என்று இறைவன் வர்ணிக்கின்றான். ஷைத்தான் தான் தூண்டி விடுபவர்களுக்கு எத்தகைய ஆயுதங்களைத் தருகிறான் எனில், அவை ஒரு குறுகிய காலம் வரை பெரும் சாதனை புரியக்கூடியதாகவே தென்படுகின்றன. இறுதியில் அவற்றைப் பயன்படுத்துபவனின் பிடரி நரம்பையே அவை அறுத்து விடுகின்றன.

கடைசியாக சில அறிவுரைகள்:

நம் அமைப்பில் இருக்கும் உலமாப் பெருமக்கள் கவனிக்க வேண்டும். அவர்களுடைய பணி இது: அவர்கள் எந்த சிந்தனைப் பிரிவைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அப்பிரிவைச் சார்ந்த இதர உலமாக்களை அணுகி அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். தனித்தனியாகவும் இதைச் செய்யலாம்; குழு ரீதியாகவும் செய்யலாம். அவர்களுக்குக் கடிதங்கள் எழுத வேண்டும். அவர்களிடம் கூறுங்கள்: ''நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள், அதன் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை சிந்தித்தீர்களா? இதற்கு முன்பு உலமாப் பெருமக்களுக்கும், நவீன கல்வி பயின்றவர்களுக்கும் இடையில் பல மோதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றின் காரணமாக உங்களுடைய கண்ணியம் வீழ்ச்சியடைந்துகொண்டே சென்றது. உங்களுடைய கண்ணியத்துக்கு மட்டுமல்ல; இறைநெறியின் கண்ணியத்துக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இப்போது ஜமாஅத்தே இஸ்லாமி, நவீன கல்வி பயின்றவர்களில் சிறந்தவர்களைத் தேர்ந்தெடுத்து, தீனின் - இறைநெறியின்பால் அவர்களைக் கொண்டு வரத் துவங்கியிருக்கிறது. இறைநெறியின் மீது கொண்டுள்ள ஆர்வத்தின் காரணமாக அந்த மக்களும் இப்போது நெருங்கி வந்து கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் ஜமாஅத்துக்கு எதிராக நீங்கள் பிரச்சாரம் தொடங்கியிருக்கிறீர்கள். அதுவும் எத்தகைய முரட்டுத்தனமான பிரச்சாரம் எனில், அதனைக் கண்டு நவீன - கல்வி பெற்றவர்கள் ஒருபுறமிருக்கட்டும், உங்களுடைய மாணவர்களிடமே கூட உங்களுக்கு மரியாதை எஞ்சி நிற்குமா என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இத்தகைய செயல்களைக் கொண்டு நீங்கள் என்ன பயன்தான் எதிர்பார்க்கிறீர்கள்?

''மேலும் இறைவனிடம் இதற்காக நீங்கள் பதில் சொல்லியாக வேண்டுமே! அங்கு உங்களின் கதி என்னவாகும் என்று சிந்தித்துப் பார்த்தீர்களா? சில விஷயங்களில் ஜமாஅத்துடன் உங்களுக்கு கருத்து வேறுபாடுகள் இருக்கிறது என்றால், பேச்சுவார்த்தைகள், அறிவார்ந்த விவாதங்கள், விமர்சனங்கள் (Academic Discussion & Criticism) கொண்டு அவற்றை அகற்ற முயலக் கூடாதா? ஜமாஅத்துக்கு எதிராக ஃபத்வா கொடுத்து அதை அச்சிட்டு பரவலாக விநியோகிப்பதைத் தவிர வேறு வழியே இல்லை எனும் அளவுக்கு அந்தக் கருத்து வேறுபாடுகள் முக்கியத்துவம் வாய்ந்தவையா?

''நீங்கள் இறைநெறியை ஆதரிக்கும் உணர்வுடன்தான் இந்த 'நற்காரியத்தை' யெல்லாம் செய்கிறீர்கள் எனில் சரிதான்! ஆனால்,

இறைநெறியை ஆதரிக்கும் ஒருவன், அதே இறைநெறிக்காக - இறைவனுக்காக உழைக்கும் இன்னொருவனின் வார்த்தைகளைத் திரிக்கும் - சிதைக்கும் பணியைச் செய்வானா? ஒருவர் சொல்லாத வார்த்தைகளை இட்டுக்கட்டி அவர் மீது அபாண்டம் சுமத்து வானா? இந்த அபாண்டங்கள் தவறானவை என்று தெளிவாக நிரூபணம் ஆகிவிட்ட பிறகும், அந்தக் குற்றச்சாட்டை சுமத்துவதி லேயே அடம் பிடித்துக் கொண்டிருப்பானா?''

நம் ஜமா அத்திலுள்ள தேவ்பந்த், மதாஹரி, அஹ்லே ஹதீஸ் பிரிவைச் சார்ந்த தோழர்களிடம் நான் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் தம் பிரிவைச் சார்ந்த பெரியோர்களிடம் மேற்சொன்ன விஷயங்களைத் தெளிவாக எடுத்துக் கூறிவிட வேண்டும்.

குறிப்பாக, தேவ்பந்தி, மதாஹரி பிரிவைச் சார்ந்த சகோதரர்க ளிடம் நான் கூறுவேன்; அந்தக் கல்வி இல்லங்களில் இருக்கும் பெரியோர்கள், ஜமாஅத்துக்கு எதிராக ஃபத்வாக்கள் வெளியிட்ட தில் அவர்களுக்கு ஒரு நம்பிக்கை இருக்கிறது. அது இதுதான்: 'இந்தக் கல்வி இல்லங்களிலிருந்து வெளியேறியவர்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். நாம் கையெழுத்திட்ட ஃபத்வாக்களையும் விளம்பரங்களையும் பார்த்த வுடன் 'இது நம்முடைய ஆசிரியர்களின் கருத்தாயிற்றே; இது நம் ஞான குருவின் கருத்தாயிற்றே!' என்ற அடிப்படையில் அவர்கள் அனைவரும் நம்மை ஆதரிப்பார்கள்.''

இப்போது அந்தப் பெரியோர்களுக்கு நீங்கள் தெளிவாகத் தெரிவித்துவிட வேண்டும். 'தேவ்பந்த் கல்வி இல்லத்திலிருந்தும், மதாஹரி உலூமிலிருந்தும் நாம் குர்ஆனையும், நபிமொழிகளை யும் படித்து பலன் அடைந்தது உண்மையே! ஆனால், அங்கிருந்து இறைநம்பிக்கையை (ஈமானை) விழுங்கிவிடும் கலையை நாங்கள் கற்றுக் கொள்ளவில்லை.

ஒருவன் சத்தியத்தைத் துதிப்பதைக் கைவிட்டு ஆசிரியரைத் துதிப்பதையும், தம் குருவை துதிப்பதையும் கற்றுக் கொள்கின் றான் எனில், இஸ்லாமிய ரோஷத்துக்குப் பதிலாக சில பிரிவுகளின் மாச்சரியங்களின் பாடங்களையே படிக்கிறான் எனில், குர்ஆனை யும், நபிமொழியையும் அந்தக் கல்வி இல்லங்களில் கற்றதனால் கிடைத்த பலன்தான் என்ன?

அத்தியாயம் - 8

பெண்களுக்கு...!

நான் இதுவரை கூறி வந்தவை அனைத்தும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொதுவானவையாகும். இப்போது குறிப்பாக ஜமாஅத்துடன் இணைந்து செயல்படுகின்ற ஆர்வமுள்ள பெண்க ளுக்கு சில வார்த்தைகள்:

1. அனைத்துக்கும் முதலாக நீங்கள் இறைநெறி பற்றி அதிகம திகம் அறிந்து கொள்ள வேண்டும். இதற்காக குர்ஆனை நன்கு உணர்ந்து படிக்க வேண்டும். அத்துடன் நபிமொழிகள், மார்க்கச் சட்ட விளக்கங்கள் ஆகியவற்றின் ஒரு சில பகுதிகளையாவது படிக்க வேண்டும். இறைநெறியின் அடிப்படையான விஷயங் களை இறைநம்பிக்கையின் (ஈமானின்) தேட்டங்களை நீங்கள் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். உங்கள் தனிப்பட்ட வாழ்வு, இல்லற வாழ்வு, குடும்ப வாழ்வு மற்றும் சமூகப் பொதுவாழ்வு குறித்து மார்க்கத்தின் கட்டளைகள் என்ன என்பதை அறிந்திருக்க வேண்டும். முஸ்லிம் வீடுகளில் ஷரீஅத்துக்கு மாற்றமான செயல் முறைகள் மட்டுமல்ல; அஞ்ஞான சடங்குகளும் நடைபெறுகின் றன எனில், நம் பெண்களுக்கு போதிய இஸ்லாமிய அறிவு இல்லை என்பதே முக்கிய காரணமாகும். அனைத்துக்கும் முதலாக நீங்கள் இஸ்லாமிய அறிவுரைகளைப் பெற்று இக்குறைகளைக் களைவதில் கவனம் செலுத்த வேண்டும்.

2. இரண்டாவது பணியாகும் இது: நீங்கள் பெற்றிருக்கின்ற இறைநெறியின் அறிவுக்கேற்ப உங்கள் வாழ்வை வார்த்தெடுத்துக் கொள்ள வேண்டும். உங்களுடைய ஒழுக்கமும், உங்களுடைய பண்பாடு, உங்களுடைய குடும்ப வாழ்வு ஆகியவற்றையும் அதற் கேற்ப வார்த்திட முயல வேண்டும். ஒரு முஸ்லிம் பெண்ணிடம் பெரும் அளவு ஒழுக்க வலிமை இருக்க வேண்டும். எதனைத் தாம் சத்தியமெனக் கருதுகிறாரோ அதன்படி குடும்பத்தாரின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் செயல்படும் அளவுக்கு அவர்களு டைய ஒழுக்கம் உறுதி வாய்ந்ததாய் இருக்க வேண்டும்.

அதேபோல், ஒரு முஸ்லிம் பெண் எந்த விஷயத்தை அசத்திய மானது என்று கருதுகிறாரோ அதனை யாருடைய செல்வாக்கின் அடிப்படையிலும் ஏற்காமலிருக்கும் அளவுக்கு அவருடைய ஒழுக்கம் வலுவானதாய் இருக்க வேண்டும்.

தாய், தந்தை, கணவன் மற்றும் குடும்பத்தைச் சார்ந்த பெரியோர்கள் ஆகியோர் அனைவரும் மதிப்புக்குரியவர்களே. அவர்களுக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டியதே! அவர்களுக்கு எதிராக செயல்படக் கூடாது என்பதும் சரியே! ஆனால், அவர்களுடைய உரிமைகள் அனைத்தும், அல்லாஹ்வுடைய அவனுடைய தூதருடைய உரிமைகளுக்குக் கீழ்ப்பட்டதே ஆகும். அவற்றுக்கு மேற்பட்டவை அல்ல! இறைவனுக்கும் அவனுடைய தூதருக்கும் மாறு செய்யும் பாதையில் யாராவது உங்களை நடத்திச் செல்ல விரும்பினால், அவர்களுக்குக் கீழ்ப்படிய தெளிவாக மறுத்துவிடுங்கள். அவர் உங்கள் தந்தையாக இருந்தாலும் சரியே; உங்கள் கணவராக இருந்தாலும் சரியே! இந்த விவகாரங்களில் நீங்கள் யாருக்கும் விட்டுக் கொடுக்க வேண்டியதில்லை. உலக வாழ்வில் இதனால் எத்தகைய இழப்பு ஏற்படுவதாகத் தென்பட்டாலும் அதனையும் இறைவன் மீது உறுதியான நம்பிக்கை கொண்டு ஏற்றுக் கொள்ளுங்கள். இறைநெறியைப் பின்பற்றுவதில் நீங்கள் எந்த அளவு உறுதி காண்பிக்கிறீர்களோ, இறைவன் நாடினால், அந்த அளவு உங்கள் சூழ்நிலைகள் மீது நல்ல தாக்கங்கள் ஏற்படும். அறியாமையில் மூழ்கி இருக்கும் வீடுகளைச் சீர்திருத்தும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கும். இதற்கு நேர்மாறாக, ஷரீஅத்துக்குப் புறம்பான தகாத கோரிக்கைகளுக்கு நீங்கள் சரணடைந்துவிட்டால், உங்களின் வாழ்விலும் இஸ்லாத்தின் பேறுகளை இழந்துவிடுவீர்கள். சுற்றுச் சூழலிலும் தவறான ஒரு முன்மாதிரியை அமைத்து விடுவீர்கள்.

3. மூன்றாவது பணி இது: சமூகத்தை சீர்திருத்துதல் மற்றும் அழைப்புப் பணி தொடர்பான வேலைகளும் உங்கள் பொறுப்பிலுள்ளன. அனைத்துக்கும் முன்பாக உங்கள் நெருங்கிய உறவினர்களுக்கு இறைநெறியின் அறிவுரைகளை எடுத்துரைப்பதில் கவனம் செலுத்துங்கள். எந்த சகோதரிகளுக்கு இறைவன் குழந்தைகளை அருளியிருக்கின்றானோ, அவர்களின் கரங்களில் ஒரு மகத்தான தேர்வுத்தாளையும் வைத்து விட்டிருக்கின்றான். இந்த தேர்வுத் தாளில் வெற்றி பெறாவிட்டால் பிறகு எந்தத் தேர்வுத் தாளின் எண்களும் இந்த இழப்பை ஈடு செய்ய முடியாது.

எனவே, அனைத்தையும்விட உங்களின் முதல் கவனத்துக்குரியவை அந்தக் குழந்தைகள்தாம்! இறைநெறியை அவர்களுக்குப்

புகட்டுவதும், அதற்கேற்ப ஒழுக்கப் பயிற்சியை அவர்களுக்கு அளிப்பதும் உங்களுடைய பெரும் பொறுப்பாகும்.

திருமணமான பெண்கள் மீது மற்றொரு கடமையும் இருக்கிறது. தன் கணவர் சத்தியப்பாதையில் நடைபோடுபவராக இருந்தால், அதில் அவருக்கு அதிகமதிகம் துணைபோக வேண்டும். இன்னும் வேகமாக நடைபோடச் செய்ய வேண்டும். இந்த பாதையைக் குறித்து கணவர் அறியாதவராகவோ, அலட்சியம் காட்டுபவராகவோ இருப்பின் அவரை நேர்வழியின்பால் ஈர்க்கும் பொறுப்பையும் அப்பெண் ஏற்க வேண்டியதாக இருக்கிறது. ஒரு பெண் தன் பெற்றோருக்கு உரிய மதிப்பும் மரியாதையும் அளித்தபடியே அவர்களிடத்தில் சத்தியவாக்கை எத்தி வைக்க முடியும். குறைந்தபட்சம் சிறந்த நூல்களை அவர்களுக்குப் படிக்கக் கொடுக்க முடியும்.

4. நான்காவது பணி இது: இதனை ஒரு கடமை எனக் கருதி நிறைவேற்ற வேண்டும். உங்கள் வீட்டு வேலைகளிலிருந்து எந்த அளவு நேரத்தை மீதப்படுத்த முடியுமோ, அந்த அளவு நேரத்தை ஒதுக்கி வையுங்கள். அந்நேரத்தை இதர பெண்களுக்கு இறைநெறியின் அறிவைப் புகட்டச் செலவிடுங்கள். சிறுமிகளுக்குக் கல்வி புகட்டுங்கள். மூதாட்டிகளுக்கும் கல்வியறிவற்ற பெண்களுக்கும், எழுத - படிக்கக் கற்றுத் தாருங்கள். படித்த பெண்களுக்கு இஸ்லாமிய நூல்களை எட்டச் செய்யுங்கள்.

மகளிர் கூட்டங்களுக்கு தொடர்ந்தாற்போல் ஒழுங்காக ஏற்பாடு செய்து அவர்களுக்கு இறைநெறியைப் புரிய வையுங்கள். உரையாற்ற முடியவில்லை என்றால், சிறந்த நூல்களைப் படித்துக் காட்டுங்கள். உங்கள் சக்திக்கேற்ப எந்த அளவு செய்ய முடியுமோ, அந்த அளவு செய்யுங்கள். இவ்வாறு, நீங்கள் அறிமுகமாகியிருக்கும் வட்டத்தில் வசிக்கும் பெண்களிடமிருந்து அறியாமையையும், அஞ்ஞானத்தையும் களைய கடும் உழைப்பை மேற்கொள்ளுங்கள்.

5. ஐந்தாவது பணி இது: கல்வி பெற்ற பெண்களிடம் மற்றொரு கடமையும் இருக்கிறது. ஒரு கோணத்திலிருந்து பார்த்தால் மற்ற பணிகளைவிட இந்தப் பணி அதிமுக்கியம் வாய்ந்ததாக இருக்கிறது. இப்போது மேற்கத்திய சிந்தனையால் ஈர்க்கப்பட்ட பெண்கள் பொதுவான முஸ்லிம் பெண்களை வழிகேட்டின்பாலும் - வெட்கங்கெட்ட செயல்களின்பாலும் உளரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும் கட்டுப்பாடற்ற தன்மையின்பாலும் விரட்டிச்

சென்று கொண்டிருக்கின்றனர். உங்கள் முழு ஆற்றலையும் கொண்டு இதனை எதிர்க்க வேண்டும்.

இப்பணியை ஆண்கள் மட்டுமே ஆற்றிட முடியாது. ஆண்கள் இந்த வழிகேட்டை எதிர்த்தால் 'இது ஆணாதிக்க சமுதாயம்; அவர்கள் உங்களை அடிமைகளாக வைக்கவே விரும்புகிறார்கள். பெண்கள் வீட்டுக்குள்ளேயே இருந்து மடிய வேண்டும்; அவள் மீது சுதந்தரக் காற்றே படக்கூடாது என்பதே அவர்களின் திட்டம்' எனக் கூறி பெண்கள் ஏமாற்றப்படுகிறார்கள். எனவே, இத்தகைய குழப்பங்களைத் தடுக்க படித்த பெண்களின் உதவி மிகவும் தேவைப்படுகிறது.

இறையருளால், நம் நாட்டில் இறைவனைத் துதிக்கும் கண்ணியமான பெண்களின் எண்ணிக்கைக்கு குறைவில்லை. அவர்கள் உயர்ந்த கல்வியும் பெற்றிருக்கின்றனர். மேற்கத்திய சிந்தனைகளுக்கும், கருத்துக்களுக்கும் பலியாகி இருக்கும் பெண்களை விட இந்தப் பெண்களின் அறிவும், புத்திக்கூர்மையும், பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் எந்த விதத்திலும் குறைந்துவிடவில்லை. இப்போது இந்தப் பெண்கள் களத்தில் இறங்க வேண்டும். மேற்கத்திய கலாச்சாரத்துக்குப் பலியாகியிருக்கும் பெண்களுக்குத் தக்க பதில் கொடுக்க வேண்டும். 'முஸ்லிம் பெண்கள் இறைவன் ஏற்படுத்திய வரம்புகளை மீறத் தயாராக இல்லை. இறைவனுடையவும் அவனுடைய தூதருடையவும் வரம்புகளை முறித்து பெறப்படும் வளர்ச்சியை நாங்கள் சபிக்கின்றோம்' என வெளிப்படையாக இப்பெண்கள் எடுத்துரைக்க வேண்டும். அதுமட்டுமல்ல, கட்டுக்கோப்பாக இயங்கி, யதார்த்த நிலையில், ஒவ்வொரு தேவைக்கும் இஸ்லாமிய வரம்புகளுக்கு உட்பட்டிருந்து நிறைவுடன் செய்து காண்பிக்க வேண்டும். எந்தத் தேவைகளை நிறைவேற்றிட இறைவனின் வரம்புகளை முறிப்பது தவிர்க்க முடியாத ஒன்று எனக் கூறப்படுகிறதோ, அவையனைத்தையும் இஸ்லாமிய வரம்புகளுக்கு உட்பட்டிருந்தே நிறைவு செய்திட முடியும் என்பதை நிரூபிக்க வேண்டும். அப்போதுதான் நெறிபிறழச் செய்யும் பிரச்சாரங்களில் ஈடுபட்டிருப்போரின் வாயை சரியான முறையில் அடைக்க முடியும்.